

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 195 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மாசி 13 – ஞாயிற்றுக்கிழமை 25 பிப்ரவரி 2024 – வெளியீர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 195 : Thiruvalluvar Year - 2055 - Maasi 13 - Sunday 25 February 2024 - Dak 16 Pages ₹ 5.00


## இது வெற்று அறிவிப்புகளை வெளியிடும் அரசு அல்ல!

# தமிழ்நாட்டு மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவேற்றும் அரசு !

## நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2024) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 1516 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் க. செல்வம், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எஸ்.எஸ். பாலாஜி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருண்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, பிப்.25-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (24.02.2024) செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் உள்ளிட்ட 2465 கோடி ரூபாய் செலவிலான 96 முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, 1802.36 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 39 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி விழாப் பேருரையாற்றினார்.**

அவ்வுரையில் முதல்வர் அவர்கள், “இது வெற்று அறிவிப்புகளை வெளியிடும் அரசு அல்ல! தமிழ்நாட்டு மக்களின் குடிநீர்த் தேவைகளை நிறைவேற்றும் அரசு!” என்று குறிப்பிட்டார்.

இவ்விழாவில் முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நான் அரசுப் பொறுப்பேற்று முதன்முதலில் கவனித்த துறை மட்டுமல்ல, வளர்த்த துறை இந்தத் துறை. அதோடு என்னுடைய இதயத்திற்கு நெருக்கமான கடல் நீரை குடிநீராக்கக்கூடிய திட்டத் தொடக்க விழாவில் கலந்து கொள்வதில் கூடுதல் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று, இந்தத் திட்டத்தோடு சேர்த்து 2 ஆயிரத்து 465 கோடி ரூபாய் மதிப்பிலான 96 முடிவுற்ற திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. ஆயிரத்து 802 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 39 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருக்கிறது.

### முக்கியப் பொறுப்புகளை நாங்கள் – அமைச்சர் நேருவிடம்தான் ஒப்படைப்போம்!

நம்முடைய அமைச்சர் நேரு அவர்களைப் பொறுத்தவரைக்கும், எதையுமே பிரமாண்டமாகத்தான் செய்வார். கட்சி சார்பாக நடத்தும் மாநாடாக இருந்தாலும், அதை நாங்கள் நேரு அவர்களிடம்தான் ஒப்படைப்போம்; ஆட்சியில், நகராட்சி நிர்வாகம் போன்ற பிரமாண்டமான துறையையும் நேரு அவர்களிடம்தான் ஒப்படைத்திருக்கிறோம்.

நம்முடைய தமிழ்நாடு அதிகப்படியான நகரமயமாக்கல் கொண்ட மாநிலம்! அதனால்தான், நகராட்சி நிர்வாகத்தை மட்டும் தனியாக கவனிக்க ஒரு அமைச்சர் வேண்டும், அதுவும் துடிப்பாகச் செயல்படுகின்ற அமைச்சர் வேண்டும் என்று தேர்ந்தெடுத்து அமைச்சர் நேரு அவர்களிடம் நான் அதை ஒப்படைத்தேன்.

### தமிழ்நாட்டின் உள்கட்டமைப்பு! பிரமிக்க வைக்கிறார் அமைச்சர் நேரு!

நாம் ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகளை நான் பட்டியலிட்டால், அதற்கு இன்று ஒரு நாள் போதாது.



**நம்முடைய அமைச்சர் நேரு அவர்களைப் பொறுத்தவரைக்கும், எதையுமே பிரமாண்டமாகத்தான் செய்வார். கட்சி சார்பாக நடத்தும் மாநாடாக இருந்தாலும், அதை நாங்கள் நேரு அவர்களிடம்தான் ஒப்படைப்போம்; ஆட்சியில், நகராட்சி நிர்வாகம் போன்ற பிரமாண்டமான துறையையும் நேரு அவர்களிடம்தான் ஒப்படைத்திருக்கிறோம்.**

**நம்முடைய தமிழ்நாடு அதிகப்படியான நகரமயமாக்கல் கொண்ட மாநிலம்! அதனால்தான், நகராட்சி நிர்வாகத்தை மட்டும் தனியாக கவனிக்க ஒரு அமைச்சர் வேண்டும், அதுவும் துடிப்பாகச் செயல்படுகின்ற அமைச்சர் வேண்டும் என்று தேர்ந்தெடுத்து அமைச்சர் நேரு அவர்களிடம் நான் அதை ஒப்படைத்தேன்.**

அமைச்சர் கே.என்.நேரு அவர்கள், அவர் போலவே, அவர்கூட இருக்கின்ற அதிகாரிகளையும் முடுக்கிவிட்டு, தமிழ்நாட்டினுடைய உள்கட்டமைப்பை பிரமிப்பூட்டுகின்ற வகையில் மாற்றிக்கொண்டு இருக்கிறார். நகர்ப்புற மக்களுடைய அவசியத் தேவைகளான கல்வி - மருத்துவம் - குடிநீர் - சாலைகள் போன்றவற்றை முறையாக, சரியாக நம்முடைய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மிக மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## நாடாளுமன்றத் தேர்தல்

# காங்கிரஸ் - ஆம் ஆத்மி தொகுதி உடன்பாடு !

### டெல்லி - குஜராத் - அரியானா - கோவா - சண்டிகரில் தொகுதிப் பங்கீடு!

*புதுடெல்லி, பிப்.25-*

*நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ், ஆம் ஆத்மி இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது.*

*இரு கட்சிகள் இடையேயான தொகுதிப் பங்கீடு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டிலேயே அதிக பட்சமாக 80 மக்களை வைத் தொகுதிகளைக் கொண்ட உத்தரப்பிரதேசத்தில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக ‘இந்தியா’ கூட்டணியில் சுமூக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.*

*உத்தரப் பிரதேசத்தில் ரேபரேலி, அமேதி, வாரணாசி உள்ளிட்ட 17 தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடவுள்ளது. மீதமுள்ள 63 தொகுதிகளில் சமாஜ்வாதி மற்றும் இதர கூட்டணிக் கட்சிகள் போட்டியிடவுள்ளன.*

*மத்தியப்பிரதேசத்தில் 28 தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடுகிறது. கஜுராஹோ தொகுதியில் சமாஜ்வாதி கட்சி போட்டியிட உள்ளது. இதையடுத்து காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகள் இடையே தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு முடிவு எட்டப்பட்டது.*

*டெல்லியில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் செய்தியாளர்களைச் சந்தித்தபோது, இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டனர்.*

*டெல்லி, குஜராத், அரியானா, சண்டிகர், கோவாவில் 2 கட்சிகளும் தொகுதி பங்கீடு செய்திருப்பதாகவும், அதன்படி டெல்லியில் காங்கிரஸ் கட்சி 3 தொகுதிகளிலும், ஆம் ஆத்மி 4 தொகுதிகளிலும் போட்டியிடுவதாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் முகுல் வாஸ்னிக் தெரிவித்தார். இதே போல் குஜராத்தில் காங்கிரஸ் 24 தொகுதிகளிலும், ஆம் ஆத்மி 2 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது.*

*அரியானாவில் காங்கிரஸ் 9 தொகுதிகளிலும் ஆம் ஆத்மி ஒரு தொகுதியிலும் போட்டியிடுகின்றன.*

*கோவாவில் உள்ள 2 தொகுதிகளிலும், சண்டிகரில் உள்ள ஒரு தொகுதியிலும் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவதாக முகுல் வாஸ்னிக் குறிப்பிட்டார்.*

## தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாப் பெருமைகளை தரணியில் உயர்த்தியவர்கள் !

## பேரறிஞர் அண்ணாவின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம்!

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - நாளை திறந்து வைக்கிறார்!

**சென்னை, பிப். 25-**

**தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாப் பெருமைகளை தரணியில் உயர்த்தி, நிலைநாட்டிய ஒப்பிலாத் தலைவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடம் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதிய நினைவிடம் - இரண்டையும், நாளைய தினம் (பிப்.26 - திங்கள்கிழமை) மாலை 7.00 மணி அளவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.**

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

உலகத் தமிழினத்தின் மிக உயர்ந்த தலைவர்களாகத் திகழ்ந்த **பேரறிஞர் அண்ணா** அவர்கள் 1969–பிப்ரவரி 3ஆம் நாள் மறைந்தபின் அவருக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் எதிரில் நினைவிடம் அமைக்கப்பட்டது. அதனை மிகச் சிறந்த கட்டடக்கலை வடிவமைப்புடன் 1969 ஆம் ஆண்டில் அமைத்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

தமிழ்நாட்டு வரலாற்றில் 19 ஆண்டு காலம் முதலமைச்சராக வீற்றிருந்து, தமிழ் நாட்டை வளப்படுத்தி, தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி; இந்திய அரசியலில் எழுச்சியை ஏற்படுத்தி, உலக வரலாற்றில் உன்னதப் புகழ்ச் சின்னமாகத் திகழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமது 95ஆம் வயதில் 2018 ஆகஸ்டு திங்கள் 7ஆம் நாள் மறைந்து, நீதிமன்றத்தின் ஆணை பெற்று பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் அருகிலேயே இடம் கொண்டார்கள்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் இரண்டு நினைவிடங்களும் 8.57 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன.

சென்னைக் கடற்கரை – காமராசர் சாலையில் அமைந்துள்ள இந்த நினைவிடங்களின் முகப்பு வாயிலில் பேரறிஞர் அண்ணா நினைவிடம் – முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம் எனும் பெயர்கள் அழகுறப் பொறிக்கப்பட்டுள்ளன.

நுழைவு வாயிலைக் கடந்து உள்ளே சென்றால் எதிரில் அமர்ந்து படிப்பது போன்ற தோற்றத்தில் **பேரறிஞர் அண்ணா** அவர்களின் சிலை; வலபுறம் இளங்கோவடிகள், இடப்புறம் கம்பர் சிலைகள் அமைந்து நம்மை மகிழ்விக்கின்றன.

நினைவிடங்களின் முன்பகுதி இருபுறங்களிலும் பழமையான புல் வெளிகள் அமைந்துள்ளன. இடப்புறத்தில் ‘அண்ணா அருங்காட்சியம்’ அமைந்துள்ளது.

### வெண்மை நிறத்தில் பளிச்சிடும் மண்டபங்கள்!

பேரறிஞர் அண்ணா சதுக்கம் அமைந்துள்ள பகுதியைச் சுற்றி அமைந்த மண்டபங்கள் வெண்மை நிறத்தில் பளிச்சிடுகின்றன.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




# தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த மருத்துவர்கள் - கல்வியாளர்களை உருவாக்கியது போல்

# தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்!

## விளையாட்டு வீரர் - விராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

சென்னை,பிப்.25–

**சென்னை கலைவாணர் அரங்கத்தில், விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்குகின்ற நிகழ்ச்சி மற்றும் வேலை வாய்ப்பில், மூன்று சதவிகித ஒதுக்கீட்டின் அடிப்படையில், 4 பேர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.**

**இந்தியா மற்றும் வெளிநாடுகளில் நடைபெற்ற தேசிய & பன்னாட்டு அளவிலானப் போட்டிகளில் வென்று தமிழ்நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த, 622 வீரர் – வீராங்கனையர் – மாற்றுத்திறனுடைய வீரர் வீராங்கனையருக்கு கழக அரசு சார்பில் ரூ.16.24 கோடி ரூபாய் உயரிய ஊக்கத் தொகையையும் பல்வேறு போட்டிகளில் சாதனைகளைப் படைத்து வரும் வீரர் – வீராங்கனையர் 4 பேருக்கு விளையாட்டு வீரர்களுக்கான 3% இட ஒதுக்கீட்டின் கீழ் அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்குவதற்கான பணி நியமன ஆணைகளையும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர் பேசியதாவது:–**

தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு, இந்தியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்று நம் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்த நம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 16 கோடியே 24 லட்சம் ரூபாய் அளவில் உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோவாவில் நடைபெற்ற 37வது தேசிய விளையாட்டுப் போட்டி, தமிழ்நாட்டில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி, ஜெர்மனியில் நடைபெற்ற 8வது வேர்ல்டு கேம்ஸ், தாய்லாந்தில் நடைபெற்ற உலகத்திறன் விளையாட்டுப் போட்டி, டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி, சர்வதேச பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப், ஏசியன் சைக்கிளிங் சாம்பியன் மற்றும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற தேசிய நீச்சல் மற்றும் ரோலர்ஸ் ஸ்கேட்டிங் போட்டிகள் எனக் கிட்டத்தட்ட 9க்கும் மேற்பட்ட போட்டிகளில் பதக்கங்களை வென்ற 622 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 16 கோடியே 24 லட்சம் அளவிற்கு இன்றைக்கு உயரிய ஊக்கத்தொகையை நமது முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இங்கு வழங்கியிருக்கின்றோம்.

கடந்த டிசம்பர் மாதம் பல்வேறு போட்டிகளில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களுக்கு 5 கோடியே 28 லட்சம் அளவிற்கு உயரிய ஊக்கத் தொகையை வழங்கினோம். அதற்கு முன்பாக நவம்பர் மாதத்தில், பல்வேறு போட்டிகளில் வென்ற நம் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு ரூபாய் 3 கோடியே 80 லட்சம் அளவிற்கு உயரிய ஊக்கத்



தொகையைக் கொடுத்தோம்.

### ஒரே மாநிலம் தமிழ்நாடு!

சீனாவில் நடைபெற்ற ஏசியன் கேம்ஸ்சில் வென்ற நம் வீரர், வீராங்கனைகளுக்கு 9 கோடியே 40 லட்சம் ரூபாய் அளவிற்கு நமது முதலமைச்சர், அவர்களின் கைகளாலேயே கடந்த அக்டோபர் மாதம் உயரிய ஊக்கத்தொகையை வழங்கினார்கள். இந்திய ஒன்றியத்திலேயே ஒரு மாநில அரசு தன் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கத் தொடர்ந்து இதுமாதிரியான உயரிய ஊக்கத்தொகையை வழங்குகிறது என்றால், அந்த ஒரே மாநிலம் நம் தமிழ்நாடு மட்டும்தான்.

நம் துறைக்கு, பட்ஜெட் மிகக்குறைவு தான். வெறும் 440 கோடி ரூபாய்தான். அந்த நிதி ஒதுக்கீட்டில் எவ்வளவு அதிகமாகத் தரமுடியுமோ, அவ்வளவு அதிகமாக நம் முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாகக் கொடுக்க வேண்டுமென்று கூறவே, தொடர்ந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

### இந்திய ஒன்றியத்திற்கே ஒரு வழிகாட்டி

உங்களின் சாதனைகள் உயர்வது போல இந்த ஊக்கத்தொகையும் வரும் காலங்களில் நிச்சயமாக அதிகமாக்கப்படும். உங்கள் திறமைக்கு ஒரு அங்கீகாரமாகத்தான் உயரிய ஊக்கத்தொகையை, நம் திராவிட மாடல் அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது.

நம் திராவிட மாடல் அரசு அமைந்தபிறகு, எப்படி அனைத்துத் துறைகளிலும் இந்திய ஒன்றியத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கின்றதோ, அதேபோல விளையாட்டுத் துறையை அமைக்கத்தான் நாம் அத்தனை பேரும் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம்.

அரசு முயற்சிகளை சரியாகப் பயன்படுத்தி, நீங்கள் சாதனை படைக்கும்போதுதான் அந்த முயற்சிக்கு ஒரு பலன் ஏற்படுகின்றது. அந்தப் பலன் அடுத்தடுத்து புதிய முயற்சிகளை எடுக்கவும், உங்களுக்கு இன்னும் வலிமையாகத் துணை நிற்கவும், ஓர் உந்துதலை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது.

இன்றைக்கு தமிழ்நாடு விளையாட்டுத்துறைக்குப் பல்வேறு அமைப்புகளிலிருந்து பாராட்டும், அங்கீகாரமும் குவிந்து வருகின்றன. சென்ற வாரம், பாரம்பரியமிக்க `தி இந்து' குழுமத்தின் சார்பாக, `ஸ்போர்ட்ஸ் ஸ்டார்' இதழ் தன் 'ஏசஸ்2024 ஸ்போர்ட்ஸ் விருது' நிகழ்ச்சியில் நம் தமிழ்நாட்டிற்கு, `பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' என்ற விருதைத் தந்து நம்மைப் பெருமை படுத்தினார்கள். அந்த விருது உங்களைத்தான் சேரும்.

அதற்கு முன்பாக, `கான்பிடரேசன் ஆஃப் இந்தியன் இண்டஸ்ட்ரீஸ்' என்ற அமைப்பின் சார்பாக, நம் தமிழ்நாட்டிற்குப் பிசினஸ் ஸ்போர்ட்ஸ் அவார்டு நிகழ்ச்சியில் நம் அரசிற்கு, `பெஸ்ட் ஸ்டேட் ஃபார் ப்ரோமோட்டிங் ஸ்போர்ட்ஸ்' என்ற விருதையும் கொடுத்து, நம்மைப் பெருமை படுத்தினார்கள். அந்த விருதும் உங்களுக்குத்தான் சேரும்.

### உங்களால்தான் நம் அரசிற்கு பெருமை!

இந்த அங்கீகாரமெல்லாம் நம் அரசிற்குக் கிடைக்கிறது என்றால் காரணம், இங்கு அமர்ந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உங்களுக்குத்தான் அந்த முழுப் பெருமையும். உங்களால்தான் நம் அரசிற்கு இத்தனை பெருமைகளும், பாராட்டுகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

சமீபத்தில், கேலோ இந்தியா இளைஞர்கள் போட்டியை தமிழ்நாட்டில் முதன்முறையாக நடத்திக் காட்டினோம். அந்தப் போட்டியில் கூட 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 39 வெண்கலப் பதக்கங்கள் என முதன்முறையாக 98 பதக்கங்களை தமிழ்நாடு வென்றது. தமிழ்நாடு பதக்க பட்டியலில் சென்ற வருடம் 8வது இடத்தில் இருந்தோம். இந்த வருடம் முதல்முறையாக 2வது இடத்திற்கு வந்திருக்கிறோம்.

நம் கழக அரசு தன் திட்டங்களால் இதுவரை தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்கியிருக்கிறோம். கல்வியாளர்களை உருவாக்கியிருக்கிறோம். ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியிருக்கிறோம். இப்பொழுது நம் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற பணியில் ஈடுப்பட்டிருக்கிறோம். அந்த விளையாட்டு வீரர்கள் வேறு யாரும் கிடையாது. இங்கு வந்து அமர்ந்திருக்கக்கூடிய உங்களைத்தான் நான் சொல்கிறேன். இன்னும் பல விளையாட்டு வீரர்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளையும் மிகப்பெரிய அளவில் சென்ற வருடம் நடத்தி முடித்தோம்.

கிட்டத்தட்ட 3 லட்சத்து 71 ஆயிரம் பேர் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள். பல திறமையாளர்களை அடையாளம் காட்டியது, கைபிடித்து அழைத்து வந்தது, அந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்தான்.

குறிப்பாக, கிராமப்புறங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்குச் சரியான களம் அமைத்துக் கொடுப்பதற்கு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் அடித்தளமாக அமைந்தன.

`கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்'

சென்ற வாரம்கூட மதுரையில் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்' என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தோம். 86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 12 ஆயிரத்து 600 கிராம ஊராட்சிகளுக்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களை வழங்குகின்ற முயற்சியாக, மதுரை மாவட்டத்தில் உள்ள 420 ஊராட்சிகளுக்கு முதற்கட்டமாக கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை அளித்தோம்.

இந்தியாவில் ஸ்போர்ட்ஸ் என்றால், தமிழ்நாடு தான் 'சென்டர் ஆப் அட்ராக்ஷனாக' இருக்கவேண்டும் என்பதுதான் நம் முதலமைச்சரின் ஒரே எண்ணம். அதனால்தான் தொடர்ச்சியாக 'கேலோ இந்தியா' 'யூத் கேம்ஸ்', 'ஏசியன் கப் ஹாக்கி டோர்னமெண்ட்', 'ஸ்குவாஷ் வேல்டு கப்', 'வேல்டு சர்ஃபிங் லீக்', 'சைக்கிளத்தான்', 'சென்னை செஸ் மாஸ்டர்ஸ்2023', 'நேசனல் ஹாக்கி டோர்னமெண்ட்' போன்றவற்றைத் தொடர்ச்சியாக நடத்தி வருகிறோம். இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு திட்டம். 'தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேசன்' என்ற நிறுவனத்தை உருவாக்கி, அதன் மூலமாக வீரர், வீராங்கனைகளுக்கு உதவித்தொகையையும் வழங்கி வருகின்றோம். இதுவரைக்கும் 300க்கும் அதிகமான விளையாட்டு வீரர்களுக்கு, தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளில் பங்கேற்பதற்காக 6 கோடி ரூபாய் அளவிற்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் மூலமாக நிதி உதவி அளித்திருக்கின்றோம்.

இன்னும் சொல்லப்போனால், நம் முதலமைச்சர் அவர்கள்தான் முதன்முறையாக தன் சொந்த நிதியிலிருந்து நாங்கள் கேட்டுக் கொண்டதின் பேரில், 5 லட்சம் ரூபாயை இந்த சாம்பியன் பவுண்டேசனுக்குக் கொடுத்தார்கள். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து உதவித்தொகை பெற்ற பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் சாதனை படைத்துள்ள தங்கை பூஜா ஸ்வேதா, தம்பி சுதர்சன், ஜெகதீஷ் டில்லி, தமிழரசி, எத்திக் நாதல்லா, சங்கீதா, மனோஜ், கணேசன், பாலசுப்ரமணியன், ஆர்.வெண்ணிலா, இன்பதமிழி, எ.நளினி, செலிபரல் பாலிசி மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் இங்கு வந்திருக்கிறீர்கள்.

### ஒலிம்பிக் அகாடமி

உங்கள் அத்தனைப்பேருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, ஒலிம்பிக்கிற்குத் தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான வீரர், வீராங்கனைகள் பங்கேற்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, சென்னை உள்ளிட்ட இடங்களில் ஒலிம்பிக் அகாடமிகளையும் திறந்து வைக்கின்றோம்.

தமிழ்நாடு விளையாட்டுத்துறைக் கட்டமைப்பை மேம்படுத்த தொகுதிக்கு ஒரு 'மினி ஸ்டேடியம்' கட்டுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஒன்பது மினி ஸ்டேடியங்களுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் பணிகளைத் துவக்கி வைத்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இதுவரை இல்லாத அளவிற்கு 76 பயிற்சியாளர்களை மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் நியமித்திருக்கிறோம். ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் உட்பட, தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் உள்ள விளையாட்டுக் கட்டமைப்பை மேம்படுத்தியும் வருகின்றோம்.

6 மாவட்டங்களுக்கு மாவட்ட விளையாட்டு அரங்கம். 4 இடங்களில் ஒலிம்பிக் அகாடமி, 6 இடங்களில் பாரா விளையாட்டு அரங்கங்களையும் ஏற்படுத்தவுள்ளோம். தமிழ்நாட்டைப்போல மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு மாநிலம் இந்தியாவிலேயே இருக்க முடியாது.

ஏனென்றால், நம் அரசு திராவிட மாடல் அரசு என்கின்றோம். நம் முதலமைச்சர் அவர்கள் திராவிட மாடல் அரசு என்றால் 'எல்லோருக்கும் எல்லாம்' கிடைக்க வேண்டும் என்று சொல்கிறார். அதுதான் அவரின் லட்சியம். ஆகவேதான் மாற்றுத்திறனாளிகளின் சாதனைகளுக்குத் தொடர்ந்து நம் முதலமைச்சர் அவர்களுடன் நம்முடைய துறையும் துணை நிற்கும்.

### மாற்றுத்திறனாளிகளுக்கு உந்துசக்தி!

ஒரு மாற்றுத்திறனாளி விளையாட்டுப் போட்டிகளில் சாதிக்கும்பொழுது அந்த வெற்றி, 100 மாற்றுத்திறனாளிகளுக்கு அது உந்துசக்தியாக இருக்கும். எனவே, மாற்றுத்திறனாளி வீரர்களுக்குத் தொடர்ந்து பக்கபலமாக நம் முதலமைச்சர் அவர்களும், நம் அரசும் துணை நிற்கும். இங்கே வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவரின் வெற்றிப் பயணமும் தொடரட்டும்.

'நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்' என்று நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். நீங்கள் நீண்ட தூரம் ஓடுவதற்கும், அதிக உயரம் தாண்டுவதற்கும் நம் முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதுமே உங்களுக்குத் துணை நிற்பார்கள்.

அமைச்சர் என்கின்ற வகையில் மட்டுமல்ல, ஓர் அண்ணனாக, ஒரு சகோதரனாக நானும் உங்களுக்கு எப்பொழுதுமே துணை நிற்பேன் என்ற உறுதியை இந்த நேரத்தில் உங்களுக்கு வழங்குகின்றேன்.

உயரிய ஊக்கத்தொகைப் பெற்றுள்ள அத்தனை வீரர்கள், வீராங்கனைகளுக்கும் என் வாழ்த்துகளையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கின்றேன்."

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், பத்திரப் பதிவு மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் பி. மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், எபினேசர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, பத்திரப் பதிவு மற்றும் வணிக வரித்துறையின் அரசுச் செயலர் ஜோதி நிர்மலா, ஐ.ஏ.எஸ்., சென்னை துணை மேயர் மகேஷ்குமார், வணிக வரித்துறையின் ஆணையர் டாக்டர்.ஜெகநாதன் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., சைக்கிளிங் ரேசில் தேசிய அளவில் பதக்கம் பெற்ற தமிழரசி, பில்லியர்ட்ஸ் மற்றும் ஸ்நூக்கர்ஸ் உலகச் சேம்பியன் ஸ்ரீ கிருஷ்ணா, ஐவாஸ் தங்கப் பதக்க வெற்றியாளர் கீர்த்திகா, மலையேற்ற வீராங்கனை முத்தமிழ்ச்செல்வி, துப்பாக்கி சுடுதல் போட்டி வீராங்கனை நிலா ராஜாபாலு, செலிபிரல் பேலிசி ஸ்போர்ட்ஸ் அசோசியேசன் தலைவர் உமா ராணி உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2024) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், நெம்மேலியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நெம்மேலியில் 1516 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மற்றும் 948 கோடியே 18 இலட்சம் ரூபாய் செலவில் முடிவுற்ற 95 திட்டப் பணிகளை தொடங்கி வைத்து, 1802.36 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 39 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எஸ்.எஸ்.பாலாஜி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், ஜெர்மன் தூதரகத்தின் துணைத் தூதர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

**‘நீர் இன்றி அமையாது உலகு!’** இதைவிட குடிநீரின் தேவையை யாராலும் விளக்கி சொல்லிவிட முடியாது. அதனால்தான், கடுமையான நிதி நெருக்கடி காலத்திலும், 100 கோடி ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்களை நாம் தீட்டி வழங்கி வருகிறோம்.

2006-2011 கழக ஆட்சியில், நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன். மீஞ்சூரில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்க 2007ஆம் ஆண்டு நான்தான் அடிக்கல் நாட்டினேன். அதற்குப் பிறகு 2010ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதைத் திறந்து வைத்தார்கள். அந்த நிலையத்திலிருந்து கிடைக்கின்ற குடிநீர் மூலம், வடசென்னையில் சுமார் 10 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதைத் தொடர்ந்து நெம்மேலியில், கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்திற்கு 2010ஆம் ஆண்டு நான்தான் அடிக்கல் நாட்டினேன். இந்த நிலையத்தின் மூலமாக, தென்சென்னையில் வசிக்கின்ற சுமார் 9 லட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். அதனால்தான், பேரூரில், இது மாதிரியான நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

> **சி**ங்காரச் சென்னையை, சீர்மிகு சென்னையாக உருவாக்கியதில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான் பெரிய பங்கு இருக்கிறது! சென்னை மாநகராட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக இரண்டு முறை இருந்தவன் நான்! அப்போது சென்னையின் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களைத் தீட்டி வழங்கி இருக்கிறோம். இன்றைக்கு சென்னையை நீங்கள் சுற்றி வரும்போது பார்க்கின்ற மேம்பாலங்கள் உள்ளிட்ட பல கட்டமைப்புகள் கழக ஆட்சிக்காலத்தில்தான் உருவாக்கப்பட்டது.

**தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நிலையம்!**

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் நாள் அந்த நிலையத்திற்கும் நான்தான் அடிக்கல் நாட்டினேன். அந்த நிலையம், தெற்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய நிலையமாக அமைய இருக்கிறது. இந்த நிலையத்தை அமைக்கின்ற பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு நிச்சயமாக, உறுதியாகக் கொண்டு வரப்படும்!

நாள் ஒன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தித்திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் இன்றைக்கு நாட்டு மக்களுடைய பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையத்திலிருந்து பெறப்படுகின்ற குடிநீர் மூலம், தென் சென்னைப் பகுதிகளான வேளச்சேரி, ஆலந்தூர், புனித தோமையார் மலை, மேடவாக்கம், கோவிலம்பாக்கம், நன்மங்கலம், கீழ்க்கட்டளை, மூவரசன்பேட்டை, சோழிங்கநல்லூர், உள்ளகரம், புழுதி வாக்கம், மடிப்பாக்கம், தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் மற்றும் ஓ.எம். ஆரில் இருக்கின்ற ஐ.டி. நிறுவனப் பகுதிகளில் இருக்கின்ற சுமார் 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில், முடிவுற்ற பணிகளையும் திறந்து வைத்திருக்கிறேன்.

நகராட்சி நிர்வாக இயக்ககத்தின் சார்பில், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கின்ற 172 கோடி ரூபாய் மதிப்பிலான 52 திட்டப்பணிகளையும் திறந்து வைத்திருக்கிறேன்.

இதேபோல, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று முடிந்திருக்கின்ற 70 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பேரூராட்சிகள் இயக்கத்தை எடுத்துக்கொண்டால், 33 கோடி ரூபாய் மதிப்பிலான 12 திட்டப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில், மூன்று தனி குடிநீர்த் திட்டங்களையும், ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களையும் தொடங்கி வைத்திருக்கிறேன். இதன் மொத்த மதிப்பு 533 கோடி ரூபாய். 364 வாகனங்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் நிலத்தை மீட்கும் பணி!**

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டிருக்கின்ற குப்பைகளை, 648 கோடியே 38 இலட்ச ரூபாய் செலவில், உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கின்ற பணிக்கும் அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

- நகராட்சி நிர்வாக இயக்குனரகம் சார்பில், 813 கோடி ரூபாய் மதிப்பிலான 23 திட்டப்பணிகளுக்கும்,
- பேரூராட்சி இயக்குனரகம் சார்பில், 238 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கும் அடிக்கல் நாட்டியிருக்கிறேன்.

- இப்படி மொத்தம் 1,802 கோடி ரூபாய் மதிப்பில் 39 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியிருக்கிறேன். இவை எல்லாமே திட்டமிடப்பட்ட காலத்திற்கு முன்பாகவே திறக்கப்படும்!

**சென்னையின் வளர்ச்சிக்கு - நான் தீட்டிய ஏராளமான திட்டங்கள்!**

சிங்காரச் சென்னையை, சீர்மிகு சென்னையாக உருவாக்கியதில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்தான் பெரிய பங்கு இருக்கிறது!

சென்னை மாநகராட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக இரண்டு முறை இருந்தவன் நான்! அப்போது சென்னையின் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களைத் தீட்டி வழங்கி இருக்கிறோம். இன்றைக்கு சென்னையை நீங்கள் சுற்றி வரும்போது பார்க்கின்ற மேம்பாலங்கள் உள்ளிட்ட பல கட்டமைப்புகள் கழக ஆட்சிக்காலத்தில்தான் உருவாக்கப்பட்டது.

**பெருகி வருகின்ற மக்கள்தொகையைக் கணக்கில் கொண்டு, நெம்மேலியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. நாம் திட்டமிடுகின்ற கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் அமைக்கப்படுவதன் மூலமாக, நாளொன்றுக்கு 750 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன்கொண்ட, இந்தியாவிலேயே மிகப்பெரிய கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் நிறுவப்பட்ட மாநகரம் என்ற பெருமையை சென்னை மாநகரம் அடையும்.**

**அமைச்சர் கே.என்.நேரு - விரைந்து செய்து காட்டுவார்!**

இதன்மூலம் நம்முடைய அரசு, சென்னை மாநகர மக்களுடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறது. இதைச் சிறப்பாகவும், விரைவாகவும் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் செய்து காட்டுவார் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது.

**சென்னையின் தாகத்தைத் தீர்க்கும் அரசு இது!**

ஏனென்றால், நமது திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரைக்கும், வெற்று அறிவிப்புகள் வெளியிடுகின்ற அரசு கிடையாது! திட்டங்களை நிறைவேற்றி சென்னையின் தாகத்தைத் தீர்க்கின்ற அரசு!

நிறைவாகச் சொல்கிறேன், தலைவர் கலைஞராக இருந்தாலும் சரி, அவர் மகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினாக இருந்தாலும் சரி, நாங்கள் சொன்னதைத்தான் செய்வோம்! செய்வதைத்தான் சொல்வோம்!

இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள்.

**அரசின் புதிய கட்டிடத்திற்கு- ‘முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்!’**

சென்னை மாநகராட்சிக் கட்டடத்திற்கு அருகில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய ஒரு புதிய கட்டிடத்திற்கு தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரைச் சூட்டவேண்டும் என்று! கலைஞருடைய நூற்றாண்டு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, நிச்சயமாக அந்தக் கட்டடத்திற்கு “கலைஞர் நூற்றாண்டு விழா கட்டடம்” என்று பெயர் சூட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2024) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள நெம்மேலியில் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 1516 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் துரைமுருகன், கே.என். நேரு, எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், சென்னை மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் க.செல்வம், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், எஸ்.எஸ்.பாலாஜி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நாளை திறந்து வைக்கிறார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

**“எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது” எனப் பொறிக்கப்பட்டுள்ள, பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில்கொள்ளும் சதுக்கத்தைக் கடந்து சென்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அமர்ந்து எழுதும் வடிவிலான சிலையைக் காணலாம். சிலையைக் கடந்து சென்றால் எதிரே அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நினைவிடம், நம் நெஞ்சை ஒருக்கணம் அமைதி கொள்ளச் செய்கிறது.**

நினைவிடத்தில், **“ஓய்வெடுத்துக் கொள்ளாமல் உழைத்தவர், இங்கே ஓய்வு கொண்டிருக்கிறார்”** எனும் தொடர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எண்ணப்படியே பொறிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் நினைவிடத்தின் முன்னே இருபுறமும், தமிழ் செம்மொழி என ஒன்றிய அரசு ஏற்ற முடிவைத் தெரிவித்துப் பாராட்டி, காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 8.11.2005 அன்று எழுதிய கடிதம் ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தக வடிவில் அமைக்கப் பட்டுள்ளன.

**‘கலைஞர் உலகம்’ எனும் அருங்காட்சியகம்!**

நினைவிடத்தின் பின்புறம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புன்னகை பூத்த முகம் பொன்னிறத்தில் மிளிர்வதுடன் சுற்றிலும் மின்விளக்குகள் விண்மீன்களாக ஒளிர்கின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தின் கீழே நிலவறைப் பகுதியில், **“கலைஞர் உலகம்”** எனும் பெயரில் ஓர் அருமையான அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

**‘கலைஞர் உலகம்’ பகுதியில் இடப்புறம் சென்றால், நடைபாதையின் வலப்புறத்தில், கலைஞர் நிர்மாணித்த திருவள்ளுவர் சிலை, குடிசை மாற்றுவாரியம் முதலியவை படங்களாக அமைக்கப்பட்டு விளக்கொளியுடன் மிளிர்கின்றன.**

**உள்ளே வலப்பக்கம் திரும்பினால், இடப்பக்கச் சுவரில் தமிழ்த்தாய் வாழ்த்து பொறிக்கப் பட்டுள்ளது. அதன் கீழ்ப்புறம், ‘தமிழ்த் தாய் வாழ்த்து அரசு நிகழ்ச்சிகளில் பாடப்பட வேண்டும்’ என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 23.11.1970 அன்று பிறப்பித்த அரசாணையும், ‘தமிழ்த் தாய் வாழ்த்து மாநிலப் பாடல்’ என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.12.2021 அன்று பிறப்பித்த அரசாணையும், அவர்களின் படங்களுடன் இடம் பெற்று நம்மை மகிழ்விக்கின்றன.**

**அருகில், ‘கலைஞரின் எழிலோவியங்கள்’ எனும் அறை - அதில், கலைஞரின் இளமைக் காலம் முதல், அவர் வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்வுகள், கலைஞரின் படைப்புகள், அவர் சந்தித்த போராட்டங்கள், நிறைவேற்றிய பல்வேறு திட்டங்கள் தொடர்பான புகைப் படங்கள் அமைந்து நமக்கு மலைப்பைத் தருகின்றன.**

**அடுத்து “உரிமைப் போராளி கலைஞர்” எனும் தலைப்பைக் கொண்ட அறையில் நுழைந்தால் - தேசியக் கொடியை மாநில முதல்வர்கள் ஏற்றிட உரிமை பெற்றுத் தந்த கலைஞரின் வெற்றியைக் குறிக்கும் வகையில், ‘சென்னைக் கோட்டையில் முதன் முதல் தேசியக் கொடியை ஏற்றி வைத்து கலைஞர் உரையாற்றும் காட்சி’ அமைப்புடன் பின்புறம், தலைமைச் செயலகத்தின் முகப்புத் தோற்றம் அமைந்து நம்மை வரவேற்கிறது.**

**அடுத்து, கோபாலபுரம் இல்லத்தில் கலைஞர் அமர்ந்திருக்கும் தோற்றம் அருகில் நின்று புகைப்படம் எடுக்கலாம். சில நிமிடங்களில் புகைப்படம் நமக்கும் கிடைக்கும் வசதி அமைக்கப்பட்டுள்ளது. வலப்புறத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மெழுகுச் சிலையாக நின்று நம்மை மகிழ வைக்கிறார்.**

**கலைஞர் படைப்புகள் - நெஞ்சுக்கு நீதி, குறளோவியம் தென்பாண்டிச் சிங்கம் முதலான 8 நூல்களின் பெயர்கள் காணப்படும். அவை ஒவ்வொன்றின் மீதும் நாம் கை வைத்தால், அந்த நூல் பற்றிய விளக்கம் வீடியோவாகத் தோன்றி நமக்கு அவற்றை எடுத்து உரைக்கும்.**

> **“அரசியல் கலை அறிஞர் கலைஞர்” எனும் அறைக்குள் செல்லலாம். எதிரே கலைஞரின் பெரிய நிழற்படம். வலப்பக்கம் இருக்கைகள் அமைக்கப்பட்டு, அவற்றின் எதிரில் வெள்ளித் திரை: அதில், ஏறத்தாழ 20 நிமிடங்கள் கலைஞர் அவர்களின் பிறப்பு முதல் இறுதி நாள் வரையான முக்கிய வரலாற்று நிகழ்வுகள்; அருமையான படக் காட்சிகளாக, ‘கலையும் அரசியலும்’ எனும் தலைப்பில் நம்முன் தோன்றி நம்மை வியக்க வைக்கும்.**

அடுத்து, **“அரசியல் கலை அறிஞர் கலைஞர்”** எனும் அறைக்குள் செல்லலாம். எதிரே கலைஞரின் பெரிய நிழற்படம். வலப்பக்கம் இருக்கைகள் அமைக்கப்பட்டு, அவற்றின் எதிரில் வெள்ளித்திரை: அதில், ஏறத்தாழ 20 நிமிடங்கள் கலைஞர் அவர்களின் பிறப்பு முதல் இறுதி நாள் வரையான முக்கிய வரலாற்று நிகழ்வுகள்; அருமையான படக் காட்சிகளாக, **‘கலையும் அரசியலும்’** எனும் தலைப்பில் நம்முன் தோன்றி நம்மை வியக்க வைக்கும் .

அடுத்த அறையில், ”சரித்திர நாயகனின் சாதனைப் பயணம் தலைப்புடையது. அதில் நுழைந்தால் திருவாரூர் முதல் சென்னை வரை ரயிலில் பயணிப்பது போன்ற உணர்வை நமக்கு ஏற்படுத்தும். நாம் அமர்ந்த நிலையில், தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லை, சேலம் ரயில் நிலையங்களைக் கடந்து சென்னையை அடையலாம். அந்தந்த ஊர்களில் கலைஞர் வாழ்வோடு தொடர்புடைய நிகழ்வுகள் காட்சிகளாகத் தோன்றும்.

வழியில் யானையொன்று நாம் பயணிக்கும் ரயில் பாதையை மறித்து நின்று நமக்கு வணக்கம் செலுத்தி, வாழ்த்துவது நம்மை மெய் சிலிர்க்க வைத்திடும்.

அறைகளுக்கு வெளியே அமைந்துள்ள நடையில் இருபுறங்களிலும்,

**பெண்ணியக் காவலர்,**

**ஏழைப் பங்காளர்,**

**நவீன தமிழ் நாட்டின் சிற்பி,**

**உலகளாவிய ஆளுமைகளுடன் கலைஞர்**

– முதலான தலைப்புகளில் அமைந்த அரிய புகைப்படங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

அப்பகுதியில் 5 தொலைக்காட்சிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் தொடங்கி வைக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் தொடக்க விழா நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

நேர் எதிரே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் தோன்றும் அருமையான புகைப்படம் பெரிய அளவில் அமைந்து, **“மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி”** எனும் குறள் தொடரைத் தலைப்பாகக் கொண்டுள்ளது.

இப்பகுதியின் இறுதியில் காந்தவிசையைப் பயன்படுத்தி அமர்ந்த நிலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அந்தரத்தில் மிதக்கும் காட்சி, நம்மை அற்புத உலகிற்கு அழைத்துச் செல்லும்.

நடை பாதையை விட்டு, வெளியே வந்தால், நேர் எதிரே கலைஞர் புத்தக விற்பனை நிலையம் அமைந்துள்ளது. அங்கே, கலைஞர் எழுதிய நூல்கள் அனைத்தும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் கண்டு வெளியே வர முனைந்தால் வழியில் வலப்புறச் சுவர்களில் – தமிழர்களின் கலாச்சார மையம் . வள்ளுவர் கோட்டம், பாம்பன் பாலம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முகப்புக் கட்டடம், மெட்ரோ ரயில், அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகிய முத்தமிழறிஞர் கலைஞர் படைத்த நவீனங்களின் தோற்றம் வண்ண விளக்கொளியில் நம்மை மயங்க வைக்கின்றன.

**இவற்றையெல்லாம் பார்த்து வெளியே வர நினைத்தால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் கலந்து பேசிப் பழகிய ஓர் புதிய அற்புத உணர்வு நமக்கு ஏற்படும்.**

வெளியே வரும்போது – இருபுறங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பொன்மொழிகள் கற்பாறைகளில் தமிழிலும் ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டு நம் இதயத்திலும் பதியும் வண்ணம் அருமையாக அமைக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் புதுப்பிக்கப்பட்ட அண்ணா நினைவிடமும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதிய நினைவிடமும் – பல ஆண்டுகள் வரை நம் நெஞ்சை விட்டு என்றும் நீங்காமல் நம்மை ஆட்கொண்டிருக்கும் என்பது மட்டும் உறுதி.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்ச் சமுதாயத்தின் தன்னிகரில்லாப் பெருமைகளைத் தரணியில் உயர்த்தி, நிலைநாட்டிய ஒப்பிலாத் தலைவர்களான பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புதிய நினைவிடத்தையும் நாளைய தினம் (26.2.2024 – திங்கள்கிழமை) மாலை 7.00 மணி அளவில் திறந்து வைக்கிறார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.2.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா சந்தித்து, பெரம்பலூர் மாவட்டத்தில் 366 கோடி ரூபாய்மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு தேயிலை விவசாயிகளின் நலன் காத்திட பசுந்தேயிலைக்கு ஊக்கத்தொகையாக கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வழங்கப்படும் என்றும் 2024 – 2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## தாம்பரம் - சென்னை கடற்கரை வழித்தடம்: கூடுதலாக 150 பேருந்துகள்!

சென்னை, பிப். 25–

தாம்பரம் முதல் சென்னை கடற்கரை வரை உள்ள வழித்தடத்தில் இன்று கூடுதலாக 150 பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத்துறை அறிவித்துள்ளது. ரயில்வே பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று ஞாயிறன்று சென்னையில் 44 புறநகர் ரயில் சேவை ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. பயணிகள் தேவைக்காக மாநகர பேருந்துகளை இன்று கூடுதலாக இயக்க தெற்கு ரயில்வே கோரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில் தெற்கு ரயில்வே விடுத்திருந்த கோரிக்கையை ஏற்று தாம்பரம் முதல் சென்னை கடற்கரை வரை உள்ள வழித்தடத்தில் இன்று கூடுதலாக 150 பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துத்துறை அறிவித்தது. ரயில்வே பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று காலை 10.30 மணி முதல் மாலை 3.30 வரை கூடுதலாக 150 பேருந்துகள் இயக்கப்படும் என்றும் தாம்பரம், கிண்டி, தியாகராயர் நகர், சென்ட்ரல், சென்னை கடற்கரை வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

### கால்நடைகளுக்கு மருத்துவ வசதி கிடைக்க

# புதியதாக 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஆம்புலன்ஸ் வாகனங்கள்!

## அமைச்சர் அனிதா இராதாகிருஷ்ணன் தகவல்!

**சென்னை, பிப்.25-**

**கால்நடைகளுக்கு மருத்துவ வசதி கிடைக்க புதியதாக 245 நடமாடும் கால்நடை மருத்துவ ஆம்புலன்ஸ் வாகனங்கள் இயக்கப்படும் என சட்டப்பேரவையில் அமைச்சர் அனிதா இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஆ. கிருஷ்ணசாமி:** திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஊராட்சி ஒன்றியம், சோராஞ்சேரி ஊராட்சி, அணைக்கட்டுச்சேரி கிராமத்திலுள்ள ஜெ.ஜெ. நகர் பகுதியில் புதிய கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன்:** இன்றைக்கு தமிழகத்தில் முதலமைச்சர் அவர்கள் 245 நடமாடும் கால்நடை மருத்துவமனை வாகனம் ஏறக்குறைய 15 நாட்களில் வர இருக்கின்றது.

உறுப்பினருடைய தொகுதியில் எந்தெந்தப் பகுதியில் மருத்துவமனை இல்லையோ, எங்கெங்கு கால்நடைகள் இருக்கின்றனவோ அத்தனை இடங்களுக்கும் நடமாடும் மருத்துவமனையினுடைய *ambulance van* மூலம் அந்தப் பயனை செய்கின்ற வகையிலே தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஏறக்குறைய 15 நாட்களில் இது நடக்கும், இது உண்டு உண்டு என்ற பதிலை இன்றைக்குச் சொல்லியிருக்கின்றோம்.

**ஆ.கிருஷ்ணசாமி:** சென்ற வருடம் கேட்ட ஒரு கேள்வியான எனது தொகுதியில் வெள்ளியூரில், கால்நடை மருத்தகத்திற்கு கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருந்தேன். இல்லை என்று பதிலளித்திருந்தார். ஆனால், ஓர் ஆண்டு முடிவதற்குள் அதற்கு ரூ.50 இலட்சம் ஒதுக்கித் தந்து அந்தக் கட்டடப் பணிகளைத் தொடங்குவதற்கான நிதியை ஒதுக்கித் தந்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இல்லை என்று சொன்னாலும், பிறகு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, செய்து கொடுத்திருக்கிறார், அதற்காக நன்றி. அதுபோலவே, இன்றைக்கு எல்லாபுரம் ஒன்றியம், செம்பேடு கிராமத்தில் சுமார் 5,000 கால்நடைகள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் கால்நடை மருந்தகத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பெரிய பாளையம் கிராமத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

செம்பேடு கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகமும், அதுபோல, ஆயிலச்சேரி, செங்கிலிக்குப்பம், புதுகுப்பம் போன்றப் பகுதிகளில் மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, பால் விற்பனை ஆகியவற்றைத்தான் தொழிலாக வைத்திருக்கிறார்கள். அந்த ஊரிலும் சுமார் 5,000 மாடுகளும், கால்நடைகளும் இருக்கின்றன. அவர்கள் கொசஸ்தலை ஆற்றைக் கடந்து மாகர்கள் கிராமத்திற்கு கிளை மருந்தகத்திற்கு செல்ல வேண்டி இருக்கிறது. எனவே, அங்கு ஒரு கிளை மருந்தகமும் ஏற்படுத்தித் தர முடியுமா?

**அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன்:** கடந்த காலங்களில் என்ன நடந்து இருக்கிறது என்று கணக்கெடுத்துப் பார்த்தோம் என்று சொன்னால், கணக்கின்படி இன்றைக்கு கால்நடை கிளைநிலையங்கள், மருத்துவமனைகள் அதிகமாக இருக்கின்றது. ஏனென்றால், அவசரமாகக் கேட்கும்போது, எங்கள் ஊருக்கு நாங்கள் கொண்டு செல்கிறோம் என்று *order* போட்டு, *order* போட்டு அருகருகில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், என்னென்ன வகையிலே கால்நடைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்ற வகையிலே உத்தரவுகளை வழங்கியிருக்கி றார்கள்.

அந்த உத்தரவின்பேரில் இன்றைக்கு 245 கால்நடை வருகிறது. வரயிருக்கிற சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே, முதலமைச்சர் அவர்களிடம் கோருயிருக்கிறோம், எங்கெங்கு தேவையோ அத்தனை இடங்களுக்கும், உறுப்பினர் அனைவருக்கும் ஒட்டுமொத்தமாக சொல்கிறேன் எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் நோய் இல்லாத கால்நடைகளை உருவாக்கக்கூடிய வகையிலே இன்றைக்கு இருக்கிறோம். இன்றைக்குக்கூட 695 புது டாக்டர்களை TNPSCல் தேர்வு செய்துநாங்கள் பதவியேற்கின்றபோது கால்நடை மருத்துவர்களே இல்லை என்ற நிலை இருந்தது. கால்நடை உதவியாளரே இல்லை என்ற நிலை இருந்தது. அன்றைக்கு 1,400 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

தற்போது 695 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, கிராமத்தினுடைய பொருளாதாரம் வளருவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்கின்ற அந்தப் பணிகளையும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று செய்து தருவோம் என்று நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 23.02.2024 அன்று நடைபெற்ற கலைச்சங்கமம் கலை நிகழ்ச்சிகளை சுற்று லாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு, கலைநிகழ்ச்சிகளை நடத்திய 4 குழுவினரை பொன்னாடை அணிவித்தும், தலா ரூ.30,000/க்கான காசோலையினையும் வழங்கி, பாராட்டினார். உடன் மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், உதகை வருவாய் கோட்டாட்சியர் மகராஜ் உட்பட பலர் உள்ளனர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.முத்துசாமி
### பிப்ரவரி 25 (2018)



மாணவப் பருவத்தில் தலைவர் கலைஞர் அவர்களால் ஈர்க்கப்பட்டு, கழக மாணவர் அணியில் சேர்ந்து, பின்னர் மாவட்ட மாணவர் அணி மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர், வட்டக் கழக பிரதிநிதி, மாவட்டக் கழக பிரதிநிதி, தலைமை செயற்குழு உறுப்பினர், இருமுறை நகர செயலாளர், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர். கழக தீர்மானக்குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், அர்பன் கூட்டுறவு வங்கி தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“எத்தனையோ சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் இடையில் கழகம் கம்பீரமாக நிற்பதற்கு முத்துசாமி போன்றவர்கள்தான் காரணம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புகழாரம் சூட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


### இந்திய அரசியல் வானில்

# பா.ஜ.க. வீழ்ச்சி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது!

இன்னும் அறுபதிலிருந்து எழுபது நாட்களுக்குள் நடந்து முடிந்துவிடக் கூடிய இந்திய ஒன்றிய அரசுக்கான தேர்தலை கொஞ்சம் உன்னிப்பாக உற்று நோக்கினால் சிலபல உண்மைகள் பட்டவர்த்தனமாகத் தெரியும். மூன்று வாரங்களுக்கு முன்பாக, ஒட்டுமொத்த இந்துக்களுமே மிகப் பெரிய எதிர்பார்ப்புடனும், ஆவலுடனும், கவலையுடனும், ஒரே சிந்தனையுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக நம்ப வைக்கப்பட்ட ராமர் கோவில் திறப்பு விழாவை மோடி செய்து வைத்தார்.

அதை ஒட்டிய ஊடக அலப்பறைகளும் தொடர் செய்திகளும் விளம்பரங்களும் அங்கே மக்கள் செல்வதுமான பல செயல்பாடுகளை பா.ஜ.க. முன்னெ டுக்க அடுத்த வாரமே ஒட்டுமொத்த இந்திய ஊடகங்களும் வரும் நாடாளுமன்ற தேர்தலுக்கான கருத்துக் கணிப்பை வரிசையாக வெளியிடத் துவங்கினர். அந்த வாரம் முழுக்க எந்த சேனலை திறந்தாலும், பா.ஜ.க. 350 சீட், பா.ஜ.க. 370 சீட் பா.ஜ.க. 400 சீட் என்றே கணிப்புகள் வர ஒட்டுமொத்த இந்திய மக்களும் ஓஹோ மோடி தான் திரும்பவும் வர்றாரா?! என்பது போல் எண்ணத் துவங்கிய நிலையில் உத்ராகாண்ட்டில் சி.ஏ.ஏ. சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு யார் யாரை திரு மணம் செய்வது எந்தெந்த உறவுமுறைகள் திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்பது வரை ஒவ்வொரு வீட்டின் பெட் ரூம் வரையிலும் அந்த சட்டம் பாய்கிறது என்ற செய்தி மெல்ல ஒட்டுமொத்த இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் பரவ மக்களும் இது என்னடா கூத்து என்று ஙேஏஏஏ என விழித்துக் கொண்டிருக்கும் போதே.

வடநாட்டு விவசாயிகள் கடந்த பத்தாண்டு கால மோடி ஆட்சியால் தாங்கள் பாதிக்கப்பட்டதாகச் சொல்லி டெல்லியை நோக்கி படையெடுக்க நாங்க பாகிஸ்தானோட சண்டை போடுவோம், சீனாவோடு சமாதானமாகப் போவோம் என்று (சொல்லாமல்) உதார் விட்டுக் கொண்டிருந்த மோடி அரசு கடைசியாக யாரும் சண்டைக்கு வராத காரணத்தால், தன் சொந்த நாட்டு விவசாயிகள் மீதே போர்த்தொடுக்க துவங்கி அது ஒரே ரணகளமாகி, ஒரு உயிரிழப்பு வரையிலும் சென்று இப்போ மார்ச் 14ஆம் தேதி டெல்லியில் பெரிய கண்டன மாநாடு என்பது வரை சென்றுள்ளது.

இதை விட மிக முக்கிய மாற்றமாக இத்தனை காலமும் எதிர்க்கட்சிகள் எல்லாம் சொல்லிச் சொல்லி ஊடகங்கள் அனைத்தும் கண் காது உட்பட அனைத்து துவாரங்களையும் மூடிக்கொண்டே கடந்து சென்ற உலக அளவில் மிகப் பெரிய அநியாய அயோக்கியத்தனமான அங்கீகரிக்கபட்ட ஊழலாக விளங்கிய எலக்டோரல் பாண்ட் எனப்படும் தேர்தல் பத்திர முறை கேட்டினை உச்சநீதிமன்றம் தாறுமாறாக கிழித்தெறிந்து விளக்குமாற்றில் சாணியை கரைத்து அடிப்பதாக எங்கள் பகுதியில் ஒரு சொலவடை உண்டு அதே போல் மோடி அரசை அடித்து அந்த ஊழலை தடுத்து நிறுத்தி பா.ஜ.க.வின் முகம் மிக அழுக்கான ஊழல் முகம் என்று வெளிக்காட்டியிருக்கின்றது!

அடுத்ததாக சண்டிகர் மாநகர மேயர் தேர்தலில், அப்பட்டமான மிகக் கேவலமான அயோக்கியத்தனத்தை செய்து பா.ஜ.க. தனது கட்சிக்காரரை மேயர் ஆக்கியதை உச்சநீதி மன்றம் காறி உமிழ்ந்து, அடித்து துவைத்து பா.ஜ.க.வை விரட்டி விட்டு ஆம் ஆத்மியை மேயர் ஆக்கி விட்டிருக்கின்றது!

இப்படியாக பா.ஜ.க.வின் முகத்திரைகள் ஒரு பக்கமாக கிழிக்கப்பட்டுக் கொண்டிருக்க இன்னொரு பக்கம், இந்தியா கூட்டணி இல்லாமல் போய்விட்டது. மம்தா எட்டி உதைச்சிட்டாங்க கெஜ்ரிவால் ஒட்ட மாட்டார். அகிலேஷ் சரிப்பட்டு வரல அஷோக் சவானை தூக்கிட்டோம். நிதிஷ் குமாரை தூக்கிட்டொம்ன்னு எல்லாம் சொல்லி பா.ஜ.க. மட்டுமே தனிப்பெரும் கட்சியாக நிற்கிறது என்ற பிம்பத்தை மோடி அன் கோ உருவாக்கி வைத்திருந்த நிலையில் திடீரென, உத்தரபிரதேசத்தில் அகிலேஷ் காங்கிரஸ் கூட்டணி அறிவிக்கப்படுகிறது. டெல்லி, பஞ்சாப், ஹரியானா, குஜராத், அஸ்ஸாம், மத்திய பிரதேசம் என்று காங்கிரஸ் ஆம் ஆத்மி கூட்டணி கையெழுத்தாகிறது. இதெல்லாம் போக மம்தாவும் காங்கிரசுக்கு 5 சீட் ஒதுக்கி கூட்டணியை உறுதி செய்து விட்டார் என்று அறிவிப்புகள் வந்து.பா.ஜ.க.வை திக்கு முக்காட வைத்திருக்கின்றது.

அதாவது இந்தியா கூட்டணி வலிமையுடன் உயிர்ப்பெற்று விட்டது. பா.ஜ.க. தான் கூட்டணியை முடிவு செய்ய முடியாமல் தனியாக தவித்துக் கொண்டிருக்கின்றது என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது! இவை அனைத்துமே இரண்டு வாரங்கள் முன்பாக ராமர் கோவில், கருத்துக்கணிப்புகள் என்ற ஆயுதங்களுடன் பா.ஜ.க. முன்னேறிக் கொண்டிருப்பதாக நம்பவைக்கப்பட்ட நிலையில், கடந்த இரண்டு வாரங்களில் இந்தியா கூட்டணிக்கு கிடைத்த வளர்ச்சிகளும் பா.ஜ.க.வுக்கு கிடைத்திருக்கும் வீழ்ச்சிகளுமாக இந்திய அரசியல் வானில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது!

இதற்கு மேல பா.ஜ.க. வசம் இருக்கும் ஒரே அஸ்திரம் என்றால் அது ஈ வி எம் எனப்படும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் தான். அந்த பிரச்சினையையும் எதிர்க்கட்சிகள் கையிலெடுத்துவிட்டன. அந்த இயந்திரங்களை தயாரிக்கும் நிறுவனத்தில் மோடியின் ஆட்கள் நான்கு பேர் இயக்குனர்களாக இருக்கின்றனர் என்று உச்சநீதிமன்றமே சொல்லிவிட்டது. இனி பா.ஜ.க.வின் இந்த அஸ்திரமும் கொஞ்சம் கொஞ்சமாக எதிர்க்கட்சிகளால் உச்சநீதிமன்ற உதவியுடன், முனை மழுங்க வைக்கப்படும்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
**எழுத்தாளர்**

**அதிகார போதை உச்சந்தலையில் ஏறி விட்ட நிலையில்... பாஜக மமதையோடு செய்திருக்கும் இன்னொரு காரியம் ஈடியை பயன்படுத்தி கெஜ்ரிவாலை கைது செய்யப்போவதாக நோட்டீஸ் அனுப்பியது தான். அதை அக்கட்சியே நாங்கள் இந்தியா கூட்டணியிலி ருந்து வெளியேறா விட்டால், எங்கள் தலைவரை கைது செய்வதாக ஈடி மிரட்டுவதாக அறிக்கை விட்டு இப்போ பா.ஜ.க. ஈடியை எவ்வாறெல்லாம் தங்கள் அரசியல் லாபத்திற்காக தவறாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றது என்பதை மக்களிடம் அம்பலப்படுத்தி விட்டது!**

இனி இந்தியாவில் ஈடி கைது ஒன்று நடந்தால் கூட... அது எதிர்க்கட்சிகளுக்கு அனுதாபத்தையும், பா.ஜ.க. மீதான வெறுப்பையுமே மக்களிடம் கட்டமைக்கும் என்ற நிலை உருவாகியிருக்கிறது!

இந்திய தேர்தல் களத்தில் இது தான் இந்த வாரத்திற்கான கன்ஸாலிடேடட் அப்டேட்

தொடர்ந்து விவாதிப்போம் ஸ்டே டியூண்ட்!


தாங்கள் வகுத்துக்கொடுத்த
**கலைஞர் - அன்பில்**
வழியில் எங்கள் பயணம் தொடரும்...




முன்னாள்
முசிறி ஒன்றியக் கழக செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்
முசிறி விவசாய சங்க கூட்டுறவு வங்கி தலைவர்
குணசீலம் ஊராட்சி மன்ற தலைவர்

எனது தாத்தா

## தே.பொன்னுசாமி

38ம் ஆண்டு நினைவுநாளில்
வணங்குகிறேன்...

**P.சேகர் அருண் BABGL.,**
மாண்புமிகு தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்

## ரூ.16.34 கோடியில் 601 வீரர் - வீராங்கனைகளுக்கு

# உயரிய ஊக்கத் தொகைக்கான காசோலைகள் - பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப்.25-

**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ரூ.16.31 கோடி மதிப்பில் 601 வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகள் மற்றும் 3% விளையாட்டு வேலை வாய்ப்பு இடஒதுக்கீட்டில் 4 வீராங்கனை களுக்கு அரசுப் பணி நியமன ஆணை வழங்கினார்.**

**உயரிய ஊக்கத் தொகை**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (23.02.2024) உயரிய ஊக்கத் தொகை வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விழாவில், சர்வதேச, தேசிய மற்றும் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற 601 வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ரூ.16 கோடியே 31 லட்சம் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

**3% விளையாட்டு வேலைவாய்ப்பில் அரசுப் பணி நியமன ஆணை:**

தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 3% விளையாட்டு வேலைவாய்ப்பு இட ஒதுக்கீட்டின் கீழ் கால்பந்து வீராங்கனை எஸ்.ரெங்கநாயகி, வீல்சேர் பென்சிங் வீராங்கனை ஆர்.சங்கீதா, வூசு வீராங்கனைகள் பி. அகல்யா மற்றும் ஆர்.வெர்ஜின் ஆகியோருக்கு வணிக வரி மற்றும் பத்திர பதிவு துறையில் இளநிலை உதவியாளராக அரசுப் பணி நியமன ஆணையினை வழங்கினார்.

**நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது**

தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்டு இந்தியா மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று நம்முடைய இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்த விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.16 கோடியே 31 லட்சம் அளவில் உயரிய ஊக்கத் தொகை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த பெருமை அடைகின்றேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோவாவில் நடைபெற்ற 37வது தேசிய விளையாட்டுப் போட்டி, தமிழ்நாட்டில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி, ஜெர்மனியில் நடைபெற்ற 8வது உலக அளவிலான குள்ள மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டி, தாய்லாந்தில் நடைபெற்ற உலக திறன் விளையாட்டுப் போட்டி, டெல்லியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டி மற்றும் பன்னாட்டு அளவில் நடைபெற்ற பில்லியர்ட்ஸ் போட்டி, ஆசிய சைக்கிளிங் போட்டி மற்றும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற தேசிய நீச்சல் மற்றும் ரோலர் ஸ்கேட்டிங் என கிட்டத்தட்ட 9க்கும் மேற்பட்ட போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 601 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.16 கோடியே 31 லட்சம்அளவிற்கு உயரிய ஊக்கத்தொகை இன்று முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் இங்கு வழங்கி கொண்டிருக்கிறோம்.

கடந்த டிசம்பர் மாதம் நடந்த பல்வேறு போட்டிகளில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்களுக்கு ரூ.5 கோடியே 28 லட்சம் அளவுக்கு உயரிய ஊக்கத் தொகையாக வழங்கினோம். அதற்கு முன்பாக நவம்பர் மாதத்தில் பல்வேறு போட்டிகளில் வென்ற நம்முடைய விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.3 கோடியே 80 லட்சம் அளவுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கினோம். சீனாவில் நடைபெற்ற ஆசிய போட்டிகளில் வென்ற நம்முடைய விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.9 கோடியே 40 லட்சம் அளவுக்கு உயரிய ஊக்கத் தொகை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த அக்டோபர் மாதம் வழங்கினார்கள்.

இந்திய ஒன்றியத்திலேயே ஒரு மாநில அரசு தன்னுடைய விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க தொடர்ந்து இது மாதிரியான உயரிய ஊக்கத் தொகை வழங்குகிறது என்றால் அது ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடு மட்டும் தான். நம்முடைய துறைக்கு பட்ஜெட் மிக குறைவு தான் ரூ.440 கோடி தான். அந்த நிதி ஒதுக்கீட்டில் எவ்வளவு அதிகமாக தர முடியுமோ அவ்வளவு அதிகமான தொகையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு வீரர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக கொடுக்க வேண்டும் என்று தொடர்ந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு வழங்குகின்றோம்.

**ஊக்கத்தொகை அதிகரிக்கப்படும்!**

உங்களுடைய சாதனைகள் உயர்வது போல இந்த ஊக்கத் தொகையும் வருங்காலங்களில் நிச்சயமாக அதிகமாக்கப்படும். உங்கள் திறமைக்கு ஒரு அங்கீகாரமாக தான் இந்த உயரிய ஊக்கத் தொகை நம்முடைய அரசு திராவிட மாடல் அரசு வழங்கிக் கொண்டு இருக்கிறது. நம்முடைய திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு எப்படி மற்ற துறைகளிலும் இந்திய ஒன்றியத்திற்கே ஒரு வழிகாட்டியாக இருக்கின்றதோ, அதே போல விளையாட்டிலும் துறையும் இந்திய ஒன்றியத்திற்கும் ஒரு வழிகாட்டியாக அமைக்கத் தான் நாம் அனைவரும் பணியாற்றி கொண்டிருக்கிறோம். அரசு முயற்சிகளை எடுக்கின்றது. வாய்ப்புகளை வசதிகளை உங்களுக்கு ஏற்படுத்தி தருகின்றது. இவை அனைத்தையும் சரியாக பயன்படுத்தி நீங்கள் சாதனை படைக்கும் போது தான் அந்த முயற்சிக்கு ஒரு பலன் ஏற்படுகின்றது.

அந்த பலன் அடுத்தடுத்து புதிய முயற்சிகளை எடுக்கவும், உங்களுக்கு இன்னும் வலிமையாக துணை நிற்கவும் ஒரு தூண்டுதலை எங்களுக்கு ஏற்படுத்துகின்றது. இன்று தமிழ்நாடு விளையாட்டுத் துறைக்கு பல்வேறு இடங்களிலும் இருந்து பாராட்டும் அங்கீகாரமும் குவிந்து வருகிறது. சென்ற வாரம் பாராம்பரியமிக்க தி இந்து குழுமத்தின் சார்பாக ஸ்போர்ட்ஸ் ஸ்டார் பத்திரிக்கை தன்னுடைய Aces 2024 Sports Star Award நிகழ்ச்சியில் நம்முடைய தமிழ்நாட்டிற்கு Best State Promoting Sports என்ற விருதை தந்து எங்களை பெருமை படுத்தினார்கள். அந்த பெருமை உங்களுக்கு தான் சேரும். அதற்கு முன்பாக CII (Confideration of Indian industry) அமைப்பின் சார்பாக Sports Business Award நிகழ்ச்சியில் நம்முடைய தமிழ்நாட்டிற்கு Best State Promoting Sports என்ற விருதையும் கொடுத்து கௌரவப்படுத்தினார்கள். அந்த விருதும் உங்களுக்கு தான் சேரும். இந்த அங்கீகாரம் எல்லாம் அரசுக்கு கிடைக்கிறது என்றால், அதற்கு காரணம் இங்கே இருக்கின்ற விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகள், உங்களுக்குதான் அந்த முழு பெருமை, உங்களால் தான் அரசுக்கு இத்தனை பெருமைகளும் பாராட்டுகளும் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

சமீபத்தில் தான் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி தமிழ்நாட்டில் முதல் முறையாக நடத்திக் காட்டினோம். அந்தப் போட்டியில் கூட 38 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 39 வெண்கல பதக்கங்கள் என தமிழ்நாடு முதல் முறையாக 98 பதக்கங்கள் வென்றுள்ளது. பதக்க பட்டியலில் சென்ற வருடம் 8வது இடத்தில் இருந்து இப்போது 2வது இடத்தை பிடித்துள்ளோம். நம்முடைய கழக அரசு தன்னுடைய திட்டங்களால் தமிழ்நாட்டில் இருந்து தலைசிறந்த மருத்துவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கியுள்ளோம். இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான திராவிட மாடல் அரசில் தமிழ்நாட்டிலிருந்து தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். அந்த விளையாட்டு வீரர்கள் வேறு யாருமில்லை. இங்கே வந்திருக்க கூடிய அமர்ந்திருக்க கூடிய உங்களைத் தான் கூறுகிறேன். இன்னும் பல விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற எண்ணத்தோடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிக பெரிய அளவில் சென்ற வருடம் நடத்தி முடித்தோம். கிட்டதட்ட 3.71 லட்சம் பேர் முதலமைச்சர் கோப்பையில் கலந்து கொண்டார்கள். பல திறமையாளர்களை அடையாளம் காட்டி, கைபிடித்து அழைத்து வந்தது அந்த முதலமைச்சர் கோப்பை தான். குறிப்பாக கிராமப்புறங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு சரியான களம் அமைத்து கொடுப்பதற்கு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் அடித்தளமாக அமைந்தது.

சென்ற வாரம் கூட மதுரையில் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு "கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்" எனும் திட்டத்தை தொடங்கி வைத்தோம். ரூ 86 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் இருக்க கூடிய 12600 கிராமப் பஞ்சாயத்திற்கு 33 வகையான விளையாட்டு உபகரணங்களை வழங்குகின்ற முயற்சியாக மதுரை மாவட்டத்தில் உள்ள 420 ஊராட்சிகளுக்கு முதற்கட்டமாக கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அளித்தோம். இந்தியாவிலேயே விளையாட்டு என்றால் தமிழ்நாடு தான் centre of attraction ஆக இருக்க வேண்டும் என்பது தான் நம்முடைய முதலமைச்சருடைய ஒரே எண்ணம். அதனால் தான் தொடர்ச்சியாக கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள், ஆசிய ஆடவர் ஹாக்கி போட்டி, ஸ்குவாஷ் உலக கோப்பை, World Surfing League. Cyclothon, Chennai Chess Masters 2023, National Hockey Tournament போன்றவற்றை தொடர்ச்சியாக நடத்தி வந்து கொண்டிருக்கிறோம்.

இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை என்ற நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலமாக வீரர் வீராங்கனைக்கு உதவி தொகையினையும் வழங்கி வருகின்றோம். இதுவரைக்கும் 300க்கும் அதிகமான விளையாட்டு வீரர்களுக்கு தனி நபர் மற்றும் குழு போட்டிகளில் பங்கேற்கப்பதற்காக ரூ.6 கோடி அளவிற்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை மூலமாக நிதியுதவி அளித்திருக்கின்றோம். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான் முதல் முறையாக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து நாங்கள் கேட்டுக் கொண்டதற்காக ரூ.5 லட்சம் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளைக்கு வழங்கினார்கள். தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து உதவித் தொகை பெற்று பல்வேறு சர்வதேச போட்டிகளில் சாதனை படைத்துள்ள தங்கை பூஜா ஸ்வேதா, தம்பி சுதர்சன், ஜெகதீஷ் தில்லி, தமிழரசி, நித்திக் நாதெல்லா, தன்யதா, மனோஜ், கணேசன், பாலசுப்பிரமணியன், ஆர்.வெண்ணிலா, இன்பத் தமிழினி, என். நளினி, cerebral palsy மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர் வீராங்கனைகள் இங்கு வந்திருக்கிறார்கள். அனைவருக்கும் எங்களுடைய வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுல்ல ஒலிம்பியாட்டிற்கு தமிழ்நாட்டிற்கு ஏராளமான வீரர் - வீராங்கனைகள் பங்கேற்கச் செய்வதற்காக சென்னை உள்ளிட்ட இடங்களில் ஒலிம்பிக் அகாடமிகளையும் திறந்து வைக்கின்றோம். தமிழ்நாடு விளையாட்டுத் துறை கட்டமைப்பை மேம்படுத்த தொகுதிக்கு ஒரு மினி விளையாட்டரங்கம் கட்டுவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

9 மினி விளையாட்டரங்கங்களுக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பணிகளை துவங்கி வைத்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு இதுவரை இல்லாத அளவிற்கு 76 பயிற்றுநர்கள் மிகுந்த வெளிப்படை தன்மையுடன் நியமித்துள்ளோம். ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் உட்பட தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் உள்ள விளையாட்டு கட்டமைப்புகளை மேம்படுத்தி வருகின்றோம். 6 மாவட்டங்களுக்கு மாவட்ட விளையாட்டரங்கம், 4 இடங்களில் ஒலிம்பிக் அகாடமி, 6 இடங்களில் பாரா விளையாட்டு அரங்கங்களையும் ஏற்படுத்த உள்ளோம். தமிழ்நாட்டைப் போல மாற்றுத்திறனாளி வீரர் - வீராங்கனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு மாநிலம் இந்தியாவிலேயே இருக்க முடியாது. ஏனென்றால், நம்முடைய அரசு "திராவிட மாடல்" அரசு என்கின்றோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார். திராவிட மாடல் அரசு என்றால் என்ன என்றால் "எல்லோருக்கும் எல்லாம்" கிடைக்க வேண்டும் என்பது தான் திராவிட மாடல் அரசினுடைய இலட்சியம். ஆகவே தான், மாற்றுத் திறனாளிகளுடைய சாதனைகளுக்கு தொடர்ந்து முதலமைச்சர் அவர்களும், நம்முடைய துறையும் துணை நிற்கும். ஒரு மாற்றுத் திறனாளி விளையாட்டுப் போட்டியில் சாதிக்கும் போது, அந்த வெற்றி 100 மாற்றுத் திறனாளிகளுக்கு சக்தியாக இருக்கும்.

இங்கே வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருடைய வெற்றிப் பயணமும் தொடரட்டும். நீண்ட தூரம் ஓடினால் தான் அதிக உயரம் தாண்ட முடியும் என்று நம்முடைய முத்தமிழ் கலைஞர் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். நீங்கள் நீண்ட தூரம் ஓடுவதற்கும் அதிக உயரம் தாண்டுவதற்கும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதும் துணை நிற்பார்கள். அமைச்சர் என்ற வகையில் மட்டுமல்ல. ஒரு அண்ணனாக, ஒரு சகோதரனாக, நான் எப்போதுமே உங்களுக்கு துணை நிற்பேன் என்ற உறுதியை உங்களுக்கு வழங்குகின்றேன். உயரிய ஊக்கத் தொகை பெற்றுள்ள அத்தனை வீரர் - வீராங்கனைகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் அன்பையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, வடச் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத்துறை செயலாளர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரி துறை ஆணையர் முனைவர். டி. ஜகநாதன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி ஆகியோர், சென்னை பெருநகர மாநகராட்சி துணை மேயர். எம்.மகேஷ்குமார், தேசிய சைக்கிளிங் வீராங்கனை செல்வி. தமிழரசி, தேசிய பாரா தடகள வீராங்கனை செல்வி. கீர்த்திகா, பில்லியர்ட்ஸ் வீரர் ஸ்ரீ கிருஷ்ணா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வலைதளங்களில் வலம் வருவது!



விமான நிலையத்தை மலிவாக விற்று, தேர்தல் பத்திரங்களாக வாங்கிக் கொள்ளுங்கள்.

சுரங்கங்களை மலிவாக விற்று, தேர்தல் பத்திரங்களாக வாங்கிக் கொள்ளுங்கள்.

நிலத்தை மலிவாக விற்று, தேர்தல் பத்திரங்களாக வாங்கிக் கொள்ளுங்கள்.

'நாட்டை விற்க விடமாட்டேன்' என்று கோஷம் போட்ட நரேந்திர மோடி, தேர்தல் நன்கொடைக்காக நாட்டின் ஒவ்வொரு வளத்தையும் விற்கத் தயாராகிவிட்டார்.

ஆனால், விவசாயி தனது பயிருக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையைக் கூட கேட்கக்கூடாது,

ஏனென்றால் விவசாயி தேர்தல் பத்திரங்களை வழங்குவதில்லை.

**சுடும் உண்மை.**

முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசினார்! உலக நாடுகளுக்கு வழிகாட்டியான திட்டம் :

# தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் "தோழி விடுதி" திட்டம்!

## உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் தகவல்!

சென்னை, பிப். 24-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.2.2024) முகாம் அலுவலகத்தில், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி அன்னா ஜெர்டே (Ms. Anna Bjerde) அவர்கள், உலக வங்கியின் உயர் மட்ட குழுவினருடன் சந்தித்துப் பேசினார்.

அப்போது, உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசின் சார்பில் தாம்பரத்தில் செயல்படுத்தப்பட்டு வரும், பணிபுரியும் பெண்களுக்கான குறைந்த வாடகையில், தரமான மற்றும் பாதுகாப்பான தங்கும் விடுதி திட்டமான "தோழி" விடுதியை பார்வையிட்டதாகவும், மிகவும் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்திற்கு தனது பாராட்டினை தெரிவித்து, இத்திட்டம் உலக நாடுகளுக்கு ஒரு வழிகாட்டியான திட்டமாகும் என்று தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உலக வங்கியின் நிர்வாக இயக்குநரை வரவேற்று, தமிழ்நாட்டின் வேளாண் கடன் திட்டத்திற்கு 1971ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டிற்கும் உலக வங்கிக்கும் நீண்ட கால உறவு இருப்பது குறித்தும், அப்போதிலிருந்து மாநிலத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்தவும், சமூக வளர்ச்சியை ஊக்குவிக்கவும், சமச்சீரான பொருளாதார வளர்ச்சியை அடையவும் உலக வங்கி பல வெற்றிகரமான ஒத்துழைப்புகளை அளித்துள்ளது குறித்தும், தற்போது, உலக வங்கி நிதியுதவியுடன் நடைமுறையுள்ள 8 திட்டங்கள் குறித்தும், மேலும் ஆலோசனை நடைபெற்றுவரும் 3 திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்து, அனைத்துத் திட்டங்களுக்கும் உலக வங்கியின் ஆதரவைத் தொடர்ந்து எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். மேலும், அவர்களது தமிழ்நாட்டுப் பயணம் பயனுள்ளதாக அமைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தெற்காசிய மண்டல துணைத் தலைவர் மார்டின் ரைசர், சர்வதேச நிதி நிறுவன Country Manager வெண்டி வெர்னர் (Ms. Wendy Werner) மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் கலந்து கொள்கிறார்!

# வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர், தலைமை தணிக்கைக்குழு உறுப்பினர் தி.அ.முகமதுசகி தலைமையில் 27.02.2024 செவ்வாய்க்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில் வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள்கள் குறித்து கழக பொதுச் செயலாளரும், நீர்வளம் - கனிமவளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் சிறப்புரையாற்றயுள்ளார். எனவே வேலூர் மாவட்ட தி.மு.க,விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:** 1. மார்ச் 01 கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 71ம் ஆண்டு பிறந்தநாள் கொண்டாடுவது, பிப்ரவரி 26 முதல் "இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் திண்ணை பிரச்சாரம் நடத்துதல், மார்ச் 02 மற்றும் 03 தேதிகளில் திராவிட மாடல் அரசின் சாதனைகள் மற்றும் நிதிநிலை அறிக்கை விளக்க போதுக் கூட்டங்கள் நடத்துதல். கழக ஆக்கப் பணிகள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.




கழகத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம் அணியின் செயலாளர் பி.டி.சி. செல்வராஜ் தலைமையில் தலைமைக் கழக அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துணை செயலாளர்கள் பி.டி.சி.பாலு, வரதன்,ராஜா குப்புசாமி, கொல்லாபுரம் ராஜேந்திரன், ராஜகாந்தன், கோவை தமிழ்ச்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கழகத் தலைவரின் பிறந்தநாள் விழா மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் பணி தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.2.2024) முகாம் அலுவலகத்தில், உலக வங்கியின் மேலாண்மை இயக்குநர் திருமதி அன்னா ஜெர்டே (Ms. Anna Bjerde) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், தெற்காசிய மண்டல துணைத் தலைவர் மார்டின் ரைசர், சர்வதேச நிதி நிறுவன Country Manager வெண்டி வெர்னர் (Ms. Wendy Werner), உலக வங்கியின் பங்கு நிதி நிறுவனங்களின் திட்டத் தலைவர் (Equity Finance Institutions, Program Leader) பாவ்னா பாட்டியா, தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவர் டி. ராஜேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருச்செங்கோடு - குமாரபாளையம் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

**சென்னை, பிப். 25-**

**திருச்செங்கோடு - குமாரபாளையம் செல்லுகிற சாலையில், ஒப்பந்தங்கள் கோரப்பட்டு இரயில்வே பாலம் கட்டப்படும் என்று சட்டப் பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.**

இதுகுறித்து சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**தங்கமணி:** திருச்செங்கோடு - குமாரபாளையம் செல்லுகின்ற சாலையில் இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றது. இப்பொழுது போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. எடப்பாடியார் முதலமைச்சராக இருக்கின்றபோது, ரூபாய் 70 கோடிக்கு நிதியை ஒதுக்கியிருந்தார்கள். 3 ஆண்டு காலமாக நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். நிதியமைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக சொல்லியிருந்தார்கள். நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகச் சொன்னார்கள். விரைந்து செய்தால் மக்களுடைய பயன்பாட்டுக்கு எளிமையாக இருக்குமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அடுத்ததாக, காவிரி ஆற்றில் இப்போது தண்ணீர் இல்லாத காரணத்தினால் ...

**அமைச்சர் எ.வ. வேலு:** நம்முடைய உறுப்பினர் அவர்கள்சொன்னதிருச்செங்கோடு - குமாரபாளையம் சாலையானது சுமார் 23 கிலோ மீட்டர் நீளமுள்ள ஓர் மாவட்டச் சாலையாகும். அந்த சாலையில்தான் 119, 119A என்ற இரண்டு இரயில்வே கடவுகள் இருக்கின்றன. நீங்கள் தொடர்ந்து கேட்ட அடிப்படையில்தான் அதற்கு முன்னுரிமை கொடுத்து, செறிவுகளை எடுத்து பார்க்கிறபொழுது, 22 ஆம் தேதியில் 119ல் இரயில்வே கடவுகளின் அலகு 1,20,000 போக்குவரத்து செறிவும், 119Aல் 1,22,550 செறிவும் இருப்பதை கருத்தில்கொண்டுதான், DPR ரூபாய் 77 கோடிக்கு தயார் செய்யப்பட்டிருக்கிறது. அது ஆய்வில் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு அதற்கு tender போடும் நிலைக்கு வந்திருக்கிறோம். அதனால் நீங்கள் கேட்ட கேள்விற்கு இந்த அரசு மரியாதை கொடுத்துத்தான் இந்தப் பணிகள் நடைபெறுகிறது. அதற்கு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ROB பாலம் அந்த இடத்தில் கட்டப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பதிலளித்தார்.



திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் இரயில்வே கடவுச்சாலை மேம்பாலஅடிக்கல் நாட்டு விழா தொழில் முதலீட்டு, ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு இப்பணிக்கு அடிக்கல் நாட்டிபேசினார். எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் எம்.பி., பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, ஒன்றியக்குழு தலைவர் சோம. செந்தமிழ் செல்வன், பேரூராட்சி மன்ற தலைவர் ஆர்.ஆர்.ராமராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.











கலைஞர் 100
1924 - 2023
தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம்
சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார்
408 ஏக்கரில், 2500 பேர் பணிவாய்ப்பு பெறும் வகையில்,
16500 கோடி ரூபாய் முதலீட்டில் வின்பாஸ்ட் (VINFAST)
ஆட்டோ லிமிடெட் நிறுவனம் தொடங்குவதற்கான அடிக்கல்
நாட்டு விழாவில் கலந்து கொள்ளவும்
சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் பெருமழை
மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு
வீடு கட்டுவதற்கும், பராமரித்திடவும் நிதியுதவி
பயிர்களுக்கான நிவாரணத் தொகை
மீனவர்களுக்கான படகு மற்றும்
வலைகளுக்கான நிவாரணத் தொகை
சிறு வணிகர்களுக்கு குறைந்த
வட்டியில் கடனுதவி வழங்கிட
25.02.2024 அன்று
தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தரும்
"வறுமை ஒழிப்புத் திட்டம்"
தந்திட்ட எங்கள் தாயுமானவரே!
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!
அன்புடன் வரவேற்கும்
பி.கீதாஜீவன் M.Com.,B.Ed.,
சமூக நலன் – மகளிர் உரிமை துறை அமைச்சர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க


கலைஞர் 100
1924 - 2023
தூத்துக்குடி மாவட்டம், சில்லாநத்தம்
சிப்காட் தொழிற்பூங்காவில் சுமார்
408 ஏக்கரில், 2500 பேர் பணிவாய்ப்பு பெறும் வகையில்,
16500 கோடி ரூபாய்முதலீட்டில் வின்பாஸ்ட் (VINFAST)
ஆட்டோ லிமிடெட் நிறுவனம்
தொடங்குவதற்கான அடிக்கல்
நாட்டு விழாவில் கலந்து கொள்ளவும்.
சமீபத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் பெருமழை
மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு
• வீடு கட்டுவதற்கும், பராமரித்திடவும் நிதியுதவி
• பயிர்களுக்கான நிவாரணத் தொகை
• மீனவர்களுக்கான படகு மற்றும்
வலைகளுக்கான நிவாரணத் தொகை
• சிறு வணிகர்களுக்கு குறைந்த
வட்டியில் கடனுதவி வழங்கிட
25.02.2024 அன்று
தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தரும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களே வருக! வருக!!
அன்புடன் வரவேற்கும்
ஜெகன் பெரியசாமி
மேயர் – தூத்துக்குடி மாநகராட்சி – தலைமை செயற்குழு உறுப்பினர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க



கலைஞர் 100
1924 - 2023
கும்பகோணம் மாநகராட்சியில்
கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் (2023- 24)
பழைய பேருந்து நிலையம்
ரூ.22.69 கோடி
மதிப்பீட்டில் வணிக வளாகம்
மூலதன மானிய நிதி (2023- 24)
பழைய மீன் மார்கெட்
ரூ.10.70 கோடி
மதிப்பீட்டில் வணிக வளாகம்
ஆகிய திட்டங்களில் மூலம் கட்டப்படும் கட்டிடங்களுக்கு
காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டும்...
மாண்புமிகு
கழகத்தலைவர்
தமிழ்நாடு முதலமைச்சர்
அவர்களுக்கு
நன்றி! நன்றி! நன்றி!
குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி
தலைமை செயற்குழு உறுப்பினர்
தலைவர், பொதுசுகாதாரக்குழு - கும்பகோணம் மாநகராட்சி




நாள் : 25.02.2024
காலை 11.00 மணி
கழகத்தலைவர்
மாண்புமிகு
தமிழக முதல்வர்
அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும்
நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் குறித்து
மாநில வர்த்தக அணி செயலாளர்
கவிஞர் காசி முத்துமாணிக்கம்
அவர்கள் தலைமையில் நடைபெறும் ஆலோசனைக்
கூட்டத்திற்கு வருகை தரும் மாநில, மாவட்ட,
மாநகர வர்த்தக அணி அமைப்பாளர், நிர்வாகிகள்
அனைவரையும் வருக! வருக!! என
வணங்கி வரவேற்கும்....
S.வரதராஜன் (SVR)
அமைப்பாளர் திருச்சி மாநகர வர்த்தக அணி (மேற்கு)

வேலூர் நாகநதி கிராமத்தில் எருது விடும் விழாவில்

# உயிரிழந்த ராம்கி குடும்பத்திற்கு இரங்கல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, பிப். 25–**

**வேலூர் மாவட்டம் நாகநதி கிராமத்தில் நடைபெற்ற எருது விடும் விழாவில் நிகழ்ந்த சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு இரங்கல் தெரிவித்தும் நிதியுதவி – அறிவித்தும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் அறிவிப்பு வருமாறு:

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கணியம்பாடி உள்வட்டம், நாகநதி கிராமத்தில் நேற்று (23.02.2024) நடைபெற்ற எருது விடும் விழாவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த சம்பவத்தில் வேலூர் வட்டம், அரியூர் மதுரா திருமலைக்கோடியைச் சேர்ந்த ராம்கி (வயது 24) த/பெ.சுப்பன் என்பவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமானச் செய்தியை கேட்டு மிகவும் வேதனையடைந்தேன்.

இவ்விபத்தில், உயிரிழந்த ராம்கி என்பவரை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

ஊட்டியில் நடைபெற்ற ‘கலைச் சங்கமம்’ நிகழ்ச்சியில் பங்கேற்ற

# 4 குழுக்களுக்கு தலா ரூ.30 ஆயிரத்திற்கான காசோலை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

ஊட்டி, பிப்.25-

நீலகிரி மாவட்டம், ஊட்டி பழங்குடியினர் பண் பாட்டு மையத்தில், தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில், முத்தமிழறிஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நேற்று முன்தினம் நடை பெற்ற கலைச்சங்கமம் கலை நிகழ்ச்சிகளை சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச் சந் திரன் நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் தெரி வித்ததாவது

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தமிழ்நாடு அரசால் 1955 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத் தில், 1973 ம் ஆண்டில், முத்தமிழறிஞர் கருணாநிதியால் தமிழ் நாடு இயல், இசை, நாடக மன்றம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

தமிழ்நாடு இயல் இசை, நாடக மன்றத்திற்கு வழங் கப்பட்டுவந்த நிதி ஒதுக் கீட் டினை ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கியதுடன் கலைமாமணி விருது பெற்ற கலைஞர்களுக்கு வழங்கப் பட்டு வந்த பொற்கிழித் தொகையினை ரூபாய் 50 ஆயிரத் தில் இருந்து ரூபாய் ஒரு லட்சமாகவும், கலை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தமிழகக் கலைக் குழுக்களை அயல் மாநிலங்களுக்கு அனுப்பிட வழங்கப் பட்டு வந்த நிதிநல்கையை ரூ.15 லட்சத்திலிருந்து ரூ.50 லட் சம் ஆக உயர்த்தியும், கிராமி யக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை அணிக லன்கள் மற்றும் கலைப் பொருட்கள் வாங்கிட வழங் கப்பட்டு வந்த நிதியுதவியை ரூ.10 ஆயிரம் ஆக உயர்த்திடவும் ஆண்டுதோறும் 500 கலைஞர்களுக்கு வழங்கிடவும் உத்திரவிட்டுள்ளார்.

தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவினை 35 மாவட்டங்களில் கொண்டாடும் வண்ணம், தமிழ்நாடு அரசு உத்தரவின்படி, 35 மாவட்டங்களில் நடத்திட ஏற்பாடு செய்யப் பட்டு, 16.02.2024 முதல் 23.02.2024 வரை கிராமியக் கலை

நிகழ்ச்சிகள் ‘கலைச் சங்க மம்” விழாவாக நடத் தப் பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இன்று (நேற்று) நமது மாவட்டத் தில் பழங்குடியினர் மற்றும் கிரா மிய கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது. இம்மன்றத்தின் சார்பில், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந் தோறும் நிதியுதவியாக ரூ.3,000மும், மாநிலங்களிடையே கலைக் குழுக்கள் பரிமாற்றம் திட்டத்தின் கீழ்கலை குழுக்கள் மூலம் பல் வேறு மாநிலங்களுக்கு கலைநிகழ்ச்சிகள் பரிமாற்றம் செய்தலும் புகழ்பெற்ற மறைந்த கலைஞர்களின் குடும்ப ங்களுக்குக் குடும்பப் பராமரிப்பிற்காக தற்பொழுது ரூ.25,000ம் நிதியுதவியும் உள்ளிட்ட செயல்பாடுகளும் நடைபெற்று வருகிறது. மேலும், நாட்டுப்புற கலை ஞர்களுக்கும், கலைக்குழுக்களுக்கும் இசைக்கருவிகள், ஆடை அணிகலன்கள் மற்றும் கலைப் பொருட்கள் வாங்கிட ரூ.10,000 தொகை நிதியுதவியும், தமிழில் அரும்பெரும் கலை நூல் களை வெளியிட நூலாசிரியர்களுக்கு தலா ரூ.2,00,000 நிதியுதவியும் வழங்குதலும், அயல் நாடுகளில் தமிழகக் கலைகளைக் கொண்டு செல்லுதலும், மறைந்து வரும் தொன்மைச் சிறப்புமிக்க கலைகளை இளைய தலைமுறையினரும் கண்டு உணரும் வண்ணம் அவற்றை ஆவணமாக்குதல் போன்ற திட்டங்களை செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் விஜ யசாந்தி குழுவினரின் தோடா நடனம், புஷ்ப குமார் குழுவினரின் கோத்தர் நட னம், ஆர்த்தி குழுவினரின் கரகம், காவடி, நையாண்டிமேளம், கணேசன் குழுவின ரின் ஜிக்காட்டம், துடும்பாட் டம் உள்ளிட்ட கலைநிகழ்ச்சிகளை நடத்திய 4 குழுவினர்களுக்கு பொன்னாடை அணிவித்து தலா ரூ. 30,000க் கான காசோலையினை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி த்தலைவர் பொன்தோஸ், ஊட்டி வருவாய் கோட்டாட்சியர் மக ராஜ், நகரமன்றத்தலைவர் வாணீஸ்வரி, துணைத் தலை வர் ரவிக்குமார், ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன், மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் ஜார்ஜ் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சோமசுந்தரம், விழா ஒருங்கிணைப்பாளர் கலைவளர் மணி ராஜ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது, அதிகளவில் தெருமுனை பிரச்சார கூட்டங்கள் நடத்துவது, இல்லம் தேடி இளைஞரணி சம்பந்தமான ஆலோசனை கூட்டம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன் தலைமையில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் இன்பா ரகு, ஜி.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றதில் மாநகர் மாவட்ட செயலாளர் தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, பெ.குழந்தை வேலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.ஜெயராம், மாவட்ட அவைத்தலைவர் ஒச்சு பாலு, பொதுக்குழு உறுப்பினர் முத்து கணேஷ் மற்றும் பகுதி, கழக, வட்டக் கழக செயலாளர்கள், இளைஞர் அணியினர் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தே. பொன்னுசாமி

**பிப்ரவரி 25 (1986)**



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**திருச்சி மாவட்டம் முசிறி ஒன்றியக் கழகச் செயலாளர் பொதுக்குழு உறுப்பினர் என பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முசிறி வட்டம், விவசாய கூட்டுறவு வங்கி தலைவராகவும், குணசீலம் ஊராட்சித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க.

# நாடாளுமன்ற தேர்தல் களப்பணி குறித்து பேரூராட்சி - ஊராட்சி வாரியாக ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



2024 நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆலோசனைபடியும் மாவட்டத்தின் அனைத்து ஒன்றியங்களில் ஊராட்சி வாரியாகவும், பேரூராட்சிகளில் வாக்குச்சாவடி வாரியாகவும் ஆய்வுக்கூட்டம் நடைபெறும்.

**பேரூராட்சி, ஊராட்சி வாரியாக ஆய்வுக் கூட்டம்**
**(முதல் சுற்று)**

| வ. எண் | நாள் | நேரம் | கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஊராட்சிகள் | கூட்டம் நடைபெறும் இடம் | கூட்ட ஏற்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | 27.02.2024 செவ்வாய் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.திப்பிரெட்டிஅள்ளி 2.கொண்டகரஅள்ளி 3.கோடுஅள்ளி 4.வே.முத்தம்பட்டி | மணிபுரம் திருமண மண்டபம். | திரு. K.P.சக்திவேல் ஒன்றிய கழக செயலாளர் தருமபுரி கிழக்கு |
| 2 | 27.02.2024 செவ்வாய் | பகல் 12.00 முதல் 1.00 வரை | 1.பொ.மல்லாபுரம் பேரூராட்சி (12 வாக்குச் சாவடிகள்) | G.P.S மஹால் பொ.மல்லாபுரம் | திரு. K.கௌதமன் பேரூர் கழக செயலாளர் பொ.மல்லாபுரம் |
| 3 | 27.02.2024 செவ்வாய் | பிற்பகல் 2.00 முதல் 3.30 வரை | 1. பொம்மிடி 2. பி.பள்ளிப்பட்டி 3. பையர்நத்தம் 4. போதக்காடு | அண்ணா திருமண மண்டபம், பி.பள்ளிப்பட்டி | திரு. B.S.சரவணன் ஒன்றிய கழக செயலாளர் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு |
| 4 | 27.02.2024 செவ்வாய் | பிற்பகல் 4.00 முதல் 6.00 வரை | 1.அதிகாரப்பட்டி 2.அ.பள்ளிப்பட்டி 3.இருளப்பட்டி 4.மூக்காரெட்டிப்பட்டி 5.புதுப்பட்டி 6.பாப்பம்பாடி | கலைஞர் அரங்கம், இருளப்பட்டி | திரு.C.முத்துக்குமார் ஒன்றிய கழக செயலாளர் பாப்பிரெட்டிப்பட்டி கிழக்கு |
| 5. | 28.02.2024 புதன் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.தென்கரைக்கோட்டை 2.கோபிசெட்டிப்பாளையம் 3.இராமியணஅள்ளி 4.கர்த்தானூர் 5.தாதனூர் 6.குருபரஅள்ளி | திருமண மண்டபம், கர்த்தானூர் | திரு.T.நெப்போலியன் ஒன்றிய கழக செயலாளர் கடத்தூர் கிழக்கு |
| 6. | 28.02.2024 புதன் | பகல் 11.30 முதல் 1.30 வரை | 1.மணியம்பாடி 2.ஒசஅள்ளி 3.நல்லகுட்லஅள்ளி 4.ஒபிளிநாயக்கனஅள்ளி 5.லிங்கநாய்க்கனஅள்ளி 6.மடதள்ளி | MCS மஹால், கடத்தூர் | திரு. R.சிவபிரகாசம் ஒன்றிய கழக செயலாளர் கடத்தூர் மேற்கு |
| 7. | 28.02.2024 புதன் | பிற்பகல் 2.30 முதல் 4.00 வரை | 1.மூக்கனூர் 2.அக்கமனஅள்ளி 3.நாயக்கனஅள்ளி 4.குப்பூர் | திருமண மண்டபம், A.நடுஅள்ளி | திரு.N.A.மாது ஒன்றிய கழக செயலாளர் தருமபுரி வடக்கு |
| 8. | 28.02.2024 புதன் | மாலை 5.00 முதல் 6.00 வரை | 1.கடத்தூர் பேரூராட்சி (10 வாக்குச்சாவடிகள்) | MCS மஹால், கடத்தூர் | திரு.D.மோகன் பேரூர் கழக செயலாளர் கடத்தூர் |
| 9. | 03.03.2024 ஞாயிறு | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.கோபாலபுரம் 2.ஜம்மனஅள்ளி 3.பறையப்பட்டிபுதூர் 4.H.கோபிநாதம்பட்டி 5.கொக்கராப்பட்டி 6.சின்னாங்குப்பம் | கொங்கு திருமண மண்டபம், H.கோபிநாதம்பட்டி | திரு.வே.சௌந்தரராசு ஒன்றிய கழக செயலாளர் அரூர் மேற்கு |
| 10. | 03.03.2024 ஞாயிறு | பகல் 11.30 முதல் 12.30 வரை | 1.அரூர் பேரூராட்சி (13 வாக்குச்சாவடிகள் 206 முதல் 218) | பொன்கற்பகம் மண்டபம், அரூர் | திரு.முல்லை ரவி பேரூர் கழக செயலாளர் அரூர் |
| 11. | 03.03.2024 ஞாயிறு | பிற்பகல் 2.00 முதல் 3.30 வரை | 1.சிட்லிங் 2.கோட்டப்பட்டி 3.பெரியப்பட்டி 4.நரிப்பள்ளி 5.பையர்நாய்க்கன்பட்டி | R.V.மண்டபம் நரிப்பள்ளி | திரு.கோ.சந்திரமோகன் ஒன்றிய கழக செயலாளர் அரூர் கிழக்கு |
| 12. | 03.03.2024 ஞாயிறு | மாலை 4.00 முதல் 6.00 வரை | 1.கொங்கவேம்பு 2.K.வேட்ரப்பட்டி 3.கீழ்மொரப்பூர் 4.மாம்பட்டி 5.வடுகப்பட்டி | குமுதம் மஹால் H.ஈச்சம்பாடி | திரு.R.வேடம்மாள் ஒன்றிய கழக செயலாளர் அரூர் வடக்கு |
| 13. | 04.03.2024 திங்கள் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.தாசிரஅள்ளி 2.மொரப்பூர் 3.நவலை 4.இராணிமூக்கனூர் 5.கெரகோடஅள்ளி | R.V.R திருமண மண்டபம் மொரப்பூர் | திரு. ETT.செங்கண்ணன் ஒன்றிய கழக செயலாளர் மொரப்பூர் கிழக்கு |
| 14. | 04.03.2024 திங்கள் | பகல் 12.00 முதல் 01.30 வரை | 1.இருமத்தூர் 2.பன்னிகுளம் 3.வகுரப்பம்பட்டி 4.கொங்கரப்பட்டி | இலட்சுமி நாராயணா திருமண மண்டபம் கம்பைநல்லூர் | திரு. மா.ரத்தினவேல் ஒன்றிய கழக செயலாளர் மொரப்பூர் மேற்கு |
| 15. | 04.03.2024 திங்கள் | பிற்பகல் 3.00 முதல் 4.00 வரை | 1.கம்பைநல்லூர் பேரூராட்சி (11 வாக்குச்சாவடிகள்) | இலட்சுமி நாராயணா திருமண மண்டபம் கம்பைநல்லூர் | திரு.E.மோகன் பேரூர் கழக செயலாளர் கம்பைநல்லூர் |
| 16. | 04.03.2024 திங்கள் | மாலை 4.30 முதல் 6.00 வரை | 1.காரிமங்கலம் பேரூராட்சி (12 வாக்குச்சாவடிகள்) | மாவட்ட கழக அலுவலகம் காரிமங்கலம் | திரு.K.V.K.சீனிவாசன் பேரூர் கழக செயலாளர் காரிமங்கலம் |
| 17. | 05.03.2024 செவ்வாய் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.கெரகோடஹள்ளி 2.பந்தரஅள்ளி 3.அடிலம் 4.பெரியாம்பட்டி | P.M குப்புசாமி திருமண மண்டபம், பெரியாம்பட்டி | திரு. T.அன்பழகன் ஒன்றிய கழக செயலாளர் காரிமங்கலம் கிழக்கு |
| 18. | 05.03.2024 செவ்வாய் | பகல் 11.30 முதல் 01.30 வரை | 1.கும்பாரஅள்ளி 2.பொம்மஅள்ளி 3.மொட்டலூர் 4.திண்டல் | மாவட்ட கழக அலுவலகம் காரிமங்கலம். | திரு. L.கிருஷ்ணன் ஒன்றிய கழக செயலாளர் காரிமங்கலம் மத்தியம் |
| 19. | 05.03.2024 செவ்வாய் | பிற்பகல் 2.30 முதல் 04.00 வரை | 1.ஜிட்டாண்டஅள்ளி 2.மகேந்திரமங்கலம் 3.ஜக்கசமுத்திரம் 4.பிக்கனஅள்ளி | நல்லி மஹால் திருமண மண்டபம், மல்லுப்பட்டி | திரு.M.V.T.கோபால் ஒன்றிய கழக செயலாளர் காரிமங்கலம் மேற்கு |
| 20 | 06.03.2024 புதன் | காலை 9.00 முதல் 11.00 வரை | 1.A.மல்லாபுரம் 2.பெலமாரணஅள்ளி 3.கணபதி 4.பேவுஅள்ளி 5.நல்லூர் | திருமண மண்டபம், கரகூர் | திரு.S.முனியப்பன் ஒன்றிய கழக செயலாளர் பாலக்கோடு மத்தியம் |
| 21. | 06.03.2024 புதன் | பகல் 11.30 முதல் 01.30 வரை | 1.பஞ்சபள்ளி 2.கும்மனூர் 3.சூடனூர் 4.சாமனூர் 5.சிக்கதோரணபெட்டம் | சபரி மஹால், மாரண்டஅள்ளி | திரு. P.K.அன்பழகன் ஒன்றிய கழக செயலாளர் பாலக்கோடு மேற்கு |
| 22. | 06.03.2024 புதன் | பிற்பகல் 02.00 முதல் 03.00 வரை | 1.மாரண்டஅள்ளி பேரூராட்சி (8 வாக்குச்சாவடிகள்) | சபரி மஹால், மாரண்டஅள்ளி | திரு.M.A.வெங்கடேசன் பேரூர் கழக செயலாளர் மாரண்டஅள்ளி |
| 23. | 06.03.2024 புதன் | மாலை 04.00 முதல் 06.00 வரை | 1.பாலக்கோடு பேரூராட்சி (16 வாக்குச்சாவடிகள்) | நந்தா பேலஸ், பாலக்கோடு | திரு. P.K.முரளி பேரூர் கழக செயலாளர் பாலக்கோடு |

**பி.பழனியப்பன்**
செயலாளர்
தருமபுரி மேற்கு மாவட்ட தி.முக.

# இயற்கை எய்தினார்




முத்தூர் **பேங்கர் சாமியப்ப கவுண்டர்** மகனும்
முத்தூர் பங்களா தோட்டம்

**மு.பெ.கிருஷ்ணகுமார்,**

தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

**மு.பெ.சாமிநாதன்**

ஆகியோரின் தந்தையுமான

## திரு.சா.பெருமாள்சாமி கவுண்டர்
அவர்கள்

23-02-2024 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகன் - மருமகள்
**மு.பெ.கிருஷ்ணகுமார்**
**கி.உமா**

பேத்தி :
**ஆர்த்தி - ஆதவன்**

மகள் - மருமகன்
**தனலட்சுமி - தமிழ்செல்வன்**

பேரன் :
**மகேஷ்குமார்-வினு கீர்த்தனா**

கொள்ளுப் பேத்தி : **ஆரியா**

மகன் - மருமகள்
**மு.பெ.சாமிநாதன்**
**சா.உமாதேவி**

பேரன் : **சா.ஆதவன் - ஸ்ரீ நேத்ரா**

கொள்ளுப் பேரன் - கொள்ளுப் பேத்தி
**சமரன் சாமிநாதன்**
**சனா ஆதவன்**


பேத்தி : **சிவசம்யுக்தா- ராகுல்ப்ரித்வி**

கொள்ளுப் பேத்தி :
**ராதே ராகுல்**

திருப்பூர் சம்பந்தி
**சாந்தி ஜெயபிரகாஷ்**

கோவை சம்பந்தி
**மாராத்தாள்**
**ஜெயகுமார் பழனிச்சாமி**
**காந்திமதி - நேகா**

# இயற்கை எய்தினார்



முத்தூர் **பேங்கர் சாமியப்ப கவுண்டர்** மகனும்

தி.மு.கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்,
மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர்

**மு.பெ.சாமிநாதன்**

அவர்களின் தந்தை

## திரு.சா.பெருமாள்சாமி கவுண்டர்
அவர்கள்

23-02-2024 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில்
இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன்
தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்

## இல.பத்மநாபன்

செயலாளர், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க
தலைவர் 4ஆம் மண்டலம், திருப்பூர் மாநகராட்சி

## திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக

# தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

## மாவட்ட/ மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## (ஐந்தாவது பட்டியல்)

### சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. சுற்றுச்சூழல் அணியின் மாவட்ட/மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கோவை வடக்கு மாவட்டம்**

தலைவர் - ஜ. சாதிக் பாட்சா, 16, பள்ளி வீதி, கரும்புக் கடை, கோவை 641008.

துணைத் தலைவர் - கி. மனோகரன், 26-1, காந்தி நகர், காரமடை, கோவை 641104.

அமைப்பாளர் - **எஸ். கார்த்திக் குமார்,** 5/299-c ஆசிரியர் காலனி, கணுவாய், அஞ்சல் அலுவலகம் அருகில், கோவை 641108.

துணை அமைப்பாளர்கள் - டேவிட் பீட்டர், 15/16 தியாகராஜ, நகர் சுண்டக்காமுத்தூர், கோவை 641010. வி. பிரபாகரன், 10, அம்பிகா நகர், துடியலூர், கோவை. வி. பிரகாஷ், 177, குன்னத்தூர், குன்னத்தூர் புதூர் (po), S.S. குளம் (via), கோவை 641107. இரா. திலீப் குமார், 5/44 தேக்கம்பட்டி, சீளியூர் (வழி), மேட்டுப்பாளையம், கோவை 641113. சே. முகம்மது ரபி, 151, அண்ணாஜிராவ் ரோடு, மேட்டுப்பாளையம், கோவை 641301. A. நாகராஜ், 27A, ராமுகுட்டி லே அவுட், கவுண்டம்பாளையம், கோவை-30. திருமூர்த்தி, 2/133A, கோவனூர், நாயக்கன்பாளையம் அஞ்சல், கோவை 20. S.மகேஷ் பிரசாந்த், 2/242, தெற்கு வீதி, சோமையனூர், கோவை. E. ரங்கராஜ், 1/922, மத்தம்பாளையம், பிளிச்சி அஞ்சல், கோவை. குணசேகரன், 3/4, சாலை வேம்பு மேடுர், கெம்மாராம்பாளையம், மேட்டுப்பாளையம், கோவை. ஆர். மனோஜ் குமார், 45/58A அய்யாவு பாண்டி வீதி, சொக்கம்புதூர், கோவை-39. V. செல்வராஜ், 3/113, கிழக்கு வீதி, தொட்டிபாளையம், வெள்ளமடை, கோவை-641110. ந. மனோஜ் பிரபாகர், 10/8, T.V.S. நகர், கவுண்டம்பாளையம், கோவை 30. A. ஆயிஷா அக்பர், 9, ரெயின்போ என்க்கிளைவ், சுகுணாபுரம், கிழக்கு, மயில்கல், குனியமுத்தூர் போஸ்ட், கோயம்புத்தூர்- 641008. S. முகம்மது ரபி, 151, அண்ணா ஜிரா ரோடு, மேட்டுப்பாளையம்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

தலைவர் - Y. இன்பராஜ், 172/6, வடக்கு தெரு, அலவந்தான்குளம், பல்லிக்கோட்டை அஞ்சல், சங்கர் நகர், திருநெல்வேலி.

துணைத் தலைவர் - ச. முத்துசாமி, 31 பாண்டித்துரை 1வது தெரு, குலவணிகர்புரம், பாளையங்கோட்டை.

அமைப்பாளர் - **பல்க் பி. குமார்,** 275 8வது குறுக்குத் தெரு, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி.

துணை அமைப்பாளர்கள் - ஏ. ஜமால் முகைதீன், 9/1ஏ2 வடக்கு பள்ளிவாசல் தெரு, தாழையூத்து. M. கனி(எ) அந்தோனி, 31/166 பள்ளிவாசல் தெரு, தெற்குபட்டி, மானூர். P. அந்தோணி ராஜ், 6/182 ஆதிதிராவிடர் காலனி, புதிய காலனி, களக்குடி, திருநெல்வேலி - 627201. K. அப்துல் மஜீத், 613 கே.ஓ.பி 3வது தெரு, பேட்டை, திருநெல்வேலி. A.முருகன், 204 மதுரை ரோடு, தச்சநல்லூர், திருநெல்வேலி. S.M நிஜாம், 1/124, நடுத்தெரு, குறிச்சிக்குளம். M. அமிதாப், 3, நியூ காலனி, நேரு நகர், பாளையங்கோட்டை.

**திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்**

தலைவர் - மு.க. மாணிக்கம், 39, முத்து விநாயகர் கோவில் தெரு, பணகுடி. துணைத்

தலைவர் - G. அனிராஜ், 5/417, உதிரன்முத்தன்பட்டி சக்திநகர், சிவந்திபுரம்,அம்பாசமுத்திரம் தாலுகா.

அமைப்பாளர் - **நா. முருகன்,** 8/223, தெற்கு தெரு, பெட்டைகுளம் அஞ்சல், திசையன்விளை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம் 627654.

துணை அமைப்பாளர்கள் - தங்ககிருஷ்ணன், 7/6,நடுத் தெரு, ஆவுடையம்மாள்புரம், விஜயாபதி, இராதாபுரம் 627104. ஆர். முத்துதுரை, 1ஜி, ஆசிரியர் காலனி, 1வது தெரு, அம்பாசமுத்திரம். வி.என். மாயா கிருஷ்ணன், 112, கிருஷ்ணன் கோவில் தெரு, காரங்காடு அஞ்சல், நாங்குநேரி தாலுகா. த. சரவணன், 3/115,முப்புடாதி அம்மன், கோவில் தெரு, பொட்டல், சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம், அம்பாசமுத்திரம் வட்டம். எஸ். முருகையாபாண்டியன், 3/680, பொன்நகர் ரோடு, அகஸ்தியர்பட்டி தாலுகா, அம்பாசமுத்திரம். இ. ஜெயராஜ், 35ஏ, அந்தோணியார் கோவில் தெரு, அகஸ்தியர் தெரு, வி.கே.புரம். ஆ. லெட்சுமணன், 95, இராதாபுரம் ரோடு, வள்ளியூர். எம். ரவி, 5/3 தென்கரை மேற்குதெரு திருக்குறுங்குடி, நாங்குநேரி வட்டம். த. மதிவாணன், 14/1, சின்னம்மாள்புரம் தெரு, பணகுடி. ஞானராஜ், 177/2, மெயின் ரோடு, பரப்பாடி, திருநெல்வேலி. Y. ஏசுதாஸ், வெப்பல்தெரு, முங்கிலடி, களக்காடு. செந்தில் ராஜ், 84, கோவில் தெரு, கருங்கண்ணன் குடியிருப்பு, தளபதி சமுத்திரம், திருநெல்வேலி. K. முருகன், வடக்கு தெரு, கீழபாட்டம்.

**திருப்பத்தூர் மாவட்டம்**

தலைவர் - C.S. பெரியார்தாசன், 77, பார்த்தசாரதி தெரு, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர். துணைத்

தலைவர் - P. கார்த்திக், 7, எம்டிஎன் நகர் மெயின் ரோடு, உமராபாத் அஞ்சல், ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர்.

அமைப்பாளர் - M**. சிங்காரவேலன்,** கே.பந்தாரப்பள்ளி அஞ்சல், பச்சூர் வழி, திருப்பத்தூர்.

துணை அமைப்பாளர்கள் - S. அருண்பாண்டியன் அத்தனாவூர் (கி), ஏலகிரி, திருப்பத்தூர். P. நாகராஜன் திருப்பத்தூர். S. ராஜா 51, செட்டித் தெரு, திருப்பத்தூர். G.K. கிருஷ்ணமூர்த்தி 2/66, ஆதியூர், கந்திலி திருப்பத்தூர். J. ஓம் சிவபிரகாஷ் மட்றம்ப்ள்ளி அஞ்சல், திருப்பத்தூர். N. சிவா 76, சர்ச் தெரு, வெங்கடசமுத்திரம் (கி), ஆம்பூர் தாலுக்கா, திருப்பத்தூர்.

**திருச்சி தெற்கு மாவட்டம்**
**திருச்சி கிழக்கு மாநகரம்"**

தலைவர் - P.V.பூபேஷ் கண்ணன், 3, ராஜப்பா நகர் மேற்கு, ரயில் நகர், அரியமங்கலம், திருச்சி - 10. துணைத்

தலைவர் - MKS. சாகுல் ஹமீது, 5A, கென்னடி தெரு, காமராஜ் நகர், அரியமங்கலம், திருச்சி - 10.

அமைப்பாளர் - N**. ரமேஷ்,** 23, KSJ.காம்ப்ளெக்ஸ், பாலாஜி நகர், மெயின் ரோடு, பாலாஜி நகர், காட்டூர், திருச்சி - 19.

துணை அமைப்பாளர்கள் - R. நாகராஜன், 55,மேட்டு தெரு, மல்லிகை புரம், திருச்சி - 01. K. சந்திர சேகர், 1/8, வைத்தியநாத புரம், கீழகண்டார்கோட்டை, திருச்சி - 11. N. கேசவன், 5/9, கோரிமேட்டு தெரு, கீழ சிந்தாமணி, திருச்சி - 02. பா. பிரபாகரன், 6, பாரதியார் தெரு, விவேகானந்தர் நகர், மே.க. கோட்டை, திருச்சி - 11. S. ஜெயக்குமார், 11,3வது தெரு, அல்லி தெரு, விவேகனந்தா நகர், பொன்மலை, திருச்சி - 04.

**திருச்சி மத்திய மாவட்டம்**
**திருச்சி மேற்கு மாநகரம்**

தலைவர் - S.M. சுரேந்திரன், 85,தெற்கு 3வது தெரு, கருமண்டபம் திருச்சி-1. துணைத்

தலைவர் - V. மதியழகன், 67F, வைக்கோல்கார தெரு, உறையூர், திருச்சி-3.

அமைப்பாளர் - **தங்கபாண்டியன்,** 24/C, மேலகல்நாயக்கன் தெரு, உறையூர், திருச்சி-3.

துணை அமைப்பாளர்கள் - K. சிவபாலசுப்ரமணியம், நெ.7, வெங்கடேஸ்வரா நகர், T.V. கோவில், திருச்சி. R. அரவிந்தன், 47,தெற்கு முத்துராஜா தெரு, புத்தூர் திருச்சி-17. P. திருவரசு, 2, கம்மாளதெரு, உறையூர், திருச்சி-3. K. செல்வம், 13A,காமாட்சி அம்மன் கோவில் தெரு, கல்லாங்காடு, திருச்சி. S. சரத்குமார், 3/45,கீழ தெரு கொடாப்பு, உய்யகொண்டான், திருமலை, திருச்சி-102.

**தூத்துக்குடி வடக்கு மாவட்டம்**
**தூத்துக்குடி மாநகரம்**

தலைவர் - வி. வினோத், 111/88/NA, எழில்நகர், சக்தி விநாயகபுரம். துணைத்

தலைவர் - மா. கனிராஜா, 106, அன்னை வேளாங்கன்னி நகர், கிருஷ்ணராஜபுரம் வடக்கு.

அமைப்பாளர் - **சு. பார்த்தசாரதி,** 53, அம்மன் கோவில் தெரு, பிரையண்ட் நகர், தூத்துக்குடி - 8.

துணை அமைப்பாளர்கள் - அ. மகேஸ்வரன், 136, சுப்பையாபுரம் 4 வது தெரு, தூத்துக்குடி. ஆ. பொன்னுசாமி, 4/52, முத்தம்மாள் காலணி 7 வது தெரு, தூத்துக்குடி - 628002. மு. லாரன்ஸ், 20/1, அழகேசபுரம் 2 வது தெரு, தூத்துக்குடி - 2. A. பரமசிவன், 25/10A, அண்ணா நகர், 12 மேற்கு மங்களபுரம், தூத்துக்குடி - 2. ரா. தங்கராஜ், 1-391-1, மாப்பிள்ளையூரணி, தூத்துக்குடி - 628002.

**ஈரோடு தெற்கு மாவட்டம்**
**ஈரோடு மாநகரம்**

தலைவர் - வி. பூபதி, 23/3,ஸ்வஸ்திக் கார்டன், வைராபாளையம் ரோடு, ஈரோடு-3. துணைத்

தலைவர் - ER. அருணகிரி, கணபதிபுரம், ஈரோடு - 3.

அமைப்பாளர் - **கு. இளங்கவி,** 1, கந்தப்ப வீதி, திராவிடர் தோட்டம், ஈரோடு-1.

துணை அமைப்பாளர்கள் - J. குணசேகரன், 43,எ. பி.டி.ரோடு, ஈரோடு-3. K. கார்த்திகேயன், 8/9,குண்டு நாவிதர் வீதி, பி.பெ.அக்ரஹாரம், ஈரோடு-5. கங்கா கண்ணன், 31/1, சின்னமுத்து பெயின் வீதி, இடையன்காட்டு வலசு, ஈரோடு-11. S. குமரன், 15/A, சேரன் நகர், நல்லியம் பாளையம், ஈரோடு-2. M. குணசீலன் முனியப்பன் நகர், காவிரிக்கரை, கருங்கல்பாளையம், ஈரோடு-3.

**சேலம் மத்திய மாவட்டம்**
**சேலம் மாநகரம்**

அமைப்பாளர் - S. **மோகன்,** 33/25 மாரியம்மன் கோயில் தெரு, அரிசிபாளையம், சேலம்-9.

துணை அமைப்பாளர்கள் - பா. முருகதாஸ், 8/10 இராஜகணபதி நகர், சின்னத்திருப்பதி, சேலம்-8. ரா. கார்த்திக், 179, மாரியம்மன் கோவில் தெரு, சிலநாயக்கன்பட்டி, சேலம்-201. N. சுலைமான், 202/9, அசோக் நகர், 5வது கிராஸ், கரை கரை முனியப்பன் கோயில் தெரு, கிச்சிப்பாளையம், சேலம்-15. K. அரவிந்த், 9/15 மாரியம்மன் கோவில் தெரு, பெரமனூர், சேலம். L. ரமேஷ்குமார், 183, பெரியார் தெரு, பழைய சூரமங்கலம், சேலம்-5.

**சென்னை தென்மேற்கு மாவட்டம்**

தலைவர் - M. மாரிசாமி, எண் 21/31, கூட்டுறவு காலனி, தேனாம்பேட்டை, சென்னை 600018

துணைத் தலைவர் - செந்தில்குமார் அய்யாவு, எண் 23, 45வது தெரு, 9 வது அவென்யூ, அசோக்நகர், சென்னை 600083

துணை அமைப்பாளர்கள் - விஷ்ணுசங்கர், எண் 120, 3வது குறுக்கு தெரு, தெற்கு கேசவ பெருமாள்புரம், சென்னை 600028 லயன் பா, சக்திவேல், எண் 120, 2வது மேட்லி தெரு, தி நகர், சென்னை 600024 ஹரிநாராயணன், எண் 17, 9 ரங்கராஜபுரம், முதல் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024. த.பத்மநாபன், எண் 1, ராஜீ நாயக்கன் தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600018. உ.துரைக்கண்ணு , எண் 25, ரூதர்போர்டுபுரம் மேதை, அம்பேத்கார் பாலம், சென்னை 600004. பி.சார்லி, எண் 32, என்-பிளாக் வள்ளீஸ்வரன் தோட்டம், சென்னை 600028. K. L. சிவாநந்தம், எண் 4, கர்ணன் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

**சென்னை கிழக்கு மாவட்டம்**

தலைவர் - தி.சாரதி பாலாஜி, எண் 75/17, வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை 600019. துணை

தலைவர் - எம். மனோஜ், எண்.21 எஸ்.பி.கோயில் தெரு, திருவொற்றியூர்,சென்னை 600019

**கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்**

தலைவர் - M.ஜெயின்ஜெரால்டு 1/127, முள்ளங்கினாவிளை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம். துணைத் தலைவர்கள் - T. பிறேம் அருள்ராஜ் 19/28 E, பனங்கரை, அருமனைஅஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

அமைப்பாளர் - **ஜான்ஸிலின்சேவியர்,** 10/155, பண்டாரவிளை வீடு, ஆற்றூர்,வியன்னூர் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - G.M. பிரவீன், 31-40/2, ஸ்ரீஉத்ராடம், கொடுங்குளம், மார்த்தாண்டம் அஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். ஜெனோரெனிட்டஸ், 4/122, வெள்ளியாவிளை, பாலபள்ளம் அஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். மைக்கேல்ரதீஷ், 3-1995/1, குழிவிளை, முளவிளை, வியன்னூர்அஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். ரா. வலம்புரிஜான், 9/224, இனையம் 629193, கன்னியாகுமரி மாவட்டம். அர்வின், 8/21, ஆலுவிளை, மைலோடு, ஆலங்கோடுஅஞ்சல், கன்னியாகுமரிமாவட்டம். ம. சேவியர், புல்லாணிவிளை, செங்கோடி அஞ்சல், கன்னியாகுமரி 629177.

**திருவண்ணாமலை தெற்கு மாவட்டம்**

துணை அமைப்பாளர்கள் - பூவராகவன், 149, மாரியம்மன் கோவில் தெரு, திருவண்ணாமலை. பா.சற்குணம், 788ஏ, வானவில் நகர், 3வது தெரு, வேங்கிக்கால், திருவண்ணாமலை மாவட்டம்.

**சென்னை வடகிழக்கு மாவட்டம்**

தலைவர் - தி. சாரதி பாலாஜி, 75/17, வடக்கு மாட வீதி, திருவொற்றியூர், சென்னை-19.

**மதுரை மாநகர் மாவட்டம்**

தலைவர் - எஸ். அசோக் பாபு, 29/15, சப்பாணி கோவில் தெரு, தெற்கு சந்து, தெற்குவெளி வீதி, மதுரை. துணைத்

தலைவர் - பி. விநாயகமூர்த்தி, 10ஏ, திருவள்ளுவர் நகர் 6வது தெரு, திருவள்ளுவர் நகர், பழங்காநத்தம், மதுரை.

அமைப்பாளர் - **நரேந்திரன் ஜெயராமன்,** 66, ஸ்ரீராம் கார்டன், கொடிக்குளம், மதுரை - 7.

துணை அமைப்பாளர்கள் - பி.ஜெ. ராமர், பிளாட் நம்பர் 4, மீனாட்சி அவென்யூ, பொன்னகரம் 3வது தெரு, மதுரை - 625010. பா. டேனியல் தங்கராஜ், ஆனந்தராஜ் நகர், கொடிக்குளம், மதுரை - 625007. எ.கே. உலகநாதன், 33, முனியாண்டி கோயில் தெரு, சி.எம்.ஆர். ரோடு, சின்னகண்மாய், மதுரை - 625009. தாய் கே. முரளி கணேஷ், 14ஏ, சத்தியமூர்த்தி 2வது தெரு, மீனாம்பாள்புரம், மதுரை - 625002. பி. நாகேந்திரன், எண். 3, நாகேந்திரபுரம், அழகுசுந்தரம் நகர், பைக்காரா, மதுரை - 625004. தீபக் ஜெபின், 27ஏ, அழகர் நகர் 6வது தெரு, கே. புதூர், மதுரை. எஸ். மணிமாறன், 29/13, சப்பாணி கோயில் தெற்கு சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை - 625001. க. சசிகுமார், 27, அழகரடி 2வது தெரு, கரிமேடு, மதுரை - 625016. எம். வீரமணி, பி.டி. ராஜன் ரோடு, 5வது குறுக்குத் தெரு, நரிமேடு, மதுரை.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 23.2.2024

**கார்த்திகேய சிவசேனாபதி**
செயலாளர்,
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

---

# கடலூரில் இன்று மாரத்தான் போட்டி!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் துவக்கி வைக்கிறார்!

*கடலூர், பிப். 25-* முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ரெட் பிட்னஸ் அகாடமி சார்பில், மு.க.ஸ்டாலின் மாரத்தான் போட்டி இன்று (25.02.2024- ஞாயிற்றுக்கிழமை), காலை 6.30 மணி அளவில், கடலூரில் நடைபெற உள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமை தாங்கி கொடியசைத்து மாரத்தான் போட்டியை துவக்கி வைக்க உள்ளார்.

கழகத் தேர்தல் பணிக் குழு செயலாளர் இள.புகழேந்தி, கடலூர் கிழக்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி. கதிரவன்,

கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐய்யப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் வே.விக்ரமன், மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் பா. கலைக்கோவன் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர். டவுன் ஹாலில் இருந்து மாரத்தான் போட்டி துவங்கி நடைபெற உள்ளது.

---

### வேலூரில் தி.மு.க.

# சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

*சென்னை, பிப். 25 -* வேலூரில் தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மண்டல நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு செயலாளர் சுபேர்கான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் இன்று (25.02.2024 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில், வேலூரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட, மாநகர, தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

மார்ச் 1 முதலமைச்சர்; கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளினை எழுச்சியோடு கொண்டாடுதல்.

"நம்மில் ஒருவர் நமக்கான தலைவர் மு.க.ஸ்டாலின்" கருத்தரங்கம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வு நடத்துவது.

பாசிசத்தை வீழ்த்தும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் ஆக்கப் பணிகள் குறித்து...

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், 69 சாத்தனூர் கிராமத்தில் உள்ள ஒன்றிய நடுநிலைப்பள்ளி கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் புதிய கட்டிடங்கள் கட்டிட மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அடிக்கல்நாட்டுவிழா மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையில் இக்கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திருவிடைமருதூர் ஒன்றியக் குழு தலைவர் சுபாதிருநாவுக்கரசு, துணைத்தலைவர் கி.பத்மாவதி கிருட்டிணராசு, வட்டார வளர்ச்சி அதிகாரி அருளாளன் மற்றும் அதிகாரிகள், பள்ளி ஆசிரியர்கள், ஒன்றியக் குழு உறுப்பினர் இரா.முருகன், ஒன்றியக் குழு முன்னாள் துணைத் தலைவர் ரெ.கருணாநிதி, ஆடுதுறை பேரூராட்சி கழக செயலாளர் கோ.சி.இளங்கோவன், தஞ்சை மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் ஜி.கே.எம்.இராஜா, ஊராட்சி மன்ற தலைவர் பா.தெட்சிணாமூர்த்தி. முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர். மு.சந்திரசேகரன், வழக்கறிஞர் மு.இரவிச்சந்திரன், வார்டுக் கழக செயலாளர்கள்.. ச.வேல்முருகன், கை.சி.மதியழகன், சி.சம்மந்தம், கே.பி.சு.உலகநாதன், சு.இராசா, கே.ரவிச்சந்திரன், பால்ராஜ், கோ.சாமிநான், நரசிங்கன்பேட்டை பால. இராசேந்திரன், சகாதேவன், ரெகுபதி, க.சங்கர் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.









நாள் : 25.02.2024
ஞாயிறு காலை 11 மணி
இடம் : அண்ணா அறிவாலயம்,
கலைஞர் அரங்கம்.

**தங்கத் தலைவர்**
**தமிழக முதல்வர்**
**தளபதி - பிறந்தநாள்**
மற்றும்
**நாடாளுமன்றத் தேர்தல்**
குறித்து
வர்த்தகர் அணிச் செயலாளர்

**கவிஞர்**
**காசிமுத்துமாணிக்கம்**

அவர்களின்
தலைமையில் நடைபெறும்

**கழக வர்த்தகர் அணி**

மாநில நிர்வாகிகள் மற்றும்
மாவட்டத் தலைவர்கள், அமைப்பாளர்கள்,
மாநகர அமைப்பாளர்கள் கூட்டத்திற்கு
வருகை தரும் அனைவரையும்
உள்ளத்தால் உறவாடி
உவகையுடன் வரவேற்கிறோம்.

இவண்

என்றும் தலைவர், இளந்தலைவர் வழியில்

**பெ.மாரிசெல்வன் M.C.**

மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் - கோவை மாநகர் மாவட்டம்
தலைவர், பொது சுகாதாரக்குழு, கோவை மாநகராட்சி

# கலைஞரும் நானும் 58

“**க**டவுளை வணங்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அனுபவம் போல, தன்னோடு பயணித்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான அணுக்கத்தை உணர வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த வகையில் அவர் ஒரு தீர்க்கதரிசி என்பேன் நான். மரியாதை, அன்பு, மனித மாண்பு என எல்லா வகையிலும் அவர் ஈடுஇணையற்றவர்” என நினைவு கூர்கிறார் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன்.

■ பி.வில்சன், எம்.பி, மூத்த வழக்கறிஞர்

# “வாய்யா... ‘வின்’சன்!”



“**க**ழகத்துக்கும், கலைஞருக்கும் ஒரு சோதனையான காலகட்டத்தில்தான் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு உருவானது. அப்போது முதல், பலமுறை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்தாலும், ஒவ்வொரு முறையும் வியப்புகளை அளிக்கும் ஆளுமையாக கலைஞர் இருந்தார்.

1994-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கழகத்தின் பெயர், கொடி தொடர்பான வழக்கு. நான் ஜூனியராகப் பணியாற்றிய மூத்த வழக்கறிஞர் கே.வி.வெங்கடபதியிடம் அளித்தார் கலைஞர். அவர் கலைஞரைச் சந்திக்கச் செல்கையில் என்னையும் அழைத்துச் சென்றார். அப்போதுதான் முதல்முறையாக கலைஞரைப் பார்க்கிறேன். அதற்கு முன்பு வரை கலைஞரை தூரத்தில் இருந்து பார்ப்பது, அவர் பேசுவதைக் கேட்பது என்கிற நிலையில்தான் இருந்தேன். அந்த வழக்கு கலைஞரின் உயிருக்கு இணையான வழக்கு. அந்த வழக்கில் கழகத்துக்கு சாதகமாக ஆணை பெற்றோம். அப்போது அறிவாலயத்தில் திரண்ட வழக்கறிஞர்களுடன் நானும் இடம் பெற்றிருந்தேன்.

## தன்மையா சொல்லலாமே...

கழகத்தின் வழக்கறிஞர் அணியுடன் சேர்ந்து பயணிக்கும் வாய்ப்பு அப்படித்தான் வந்தது. வலுவான தலைவர்களைக் கொண்ட வழக்கறிஞர் அணி என்பது கழகத்தின் சொத்து. சில சமயங்களில், சட்ட நுணுக்கங்களை, கலைஞரே விளக்குவார். நாம் கையாளும் வழக்குகளின் நிலை, எப்படியான வாதங்களை வைப்பது என்பதை அவரே குறிப்பிடுவார்.

ஆங்கிலத்தில் இருக்கும் வழக்கு சம்பந்தமான பிராதுகளைப் படித்துக் காட்டுகையில், திருத்தங்கள் சொல்வார். வழக்கறிஞராக நாம் அழுத்தம் கொடுத்திருக்கும் சில இடங்களில், ‘இதை ‘ஹார்ஷ்’ஆ சொல்ல வேண்டாம்யா, கொஞ்சம் தன்மையா சொன்னால் என்ன?’ எனக் கேட்பார். அதுபோல, நீதிமன்றத்தைக் குறை சொன்னால் அவருக்குப் பிடிக்காது. நீதித் துறை மாண்பை அவ்வளவு மதிப்பார்.

பின்னர் பல சந்தர்ப்பங்களில், பல வழக்குகள் குறித்து கலைஞர் அவர்களுடன் பேசிவந்தாலும், நான் நெருக்கமானது 2006-ஆம் ஆண்டில் சமச்சீர் கல்வி தொடர்பான வழக்கின்போதுதான். நான் அப்போது ‘அசிஸ்டென்ட் சொலிசிட்டர் ஜென்ரலாக’ ஒன்றிய அரசு வழக்குகளைக் கவனித்து வந்தேன். பின்னர் மாநில அரசின் தலைமை வழக்கறிஞராக கலைஞர் நியமித்தார்.

கலைஞர் அவர்களின் மிகப் பெரிய கனவுகளில் ஒன்று சமச்சீர் கல்வி. ஏழை, பணக்காரர் ஏற்றத்தாழ்வு எல்லாவற்றையும் கடந்து, அனைவருக்கும் பொதுவான பாடத்திட்டம் மற்றும் கல்விமுறையை அளிக்க வேண்டும் எனச் சமச்சீர் கல்வியைக் கொண்டுவந்தார். அந்தச் சட்டத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

டெல்லியில் இருந்து வழக்கறிஞர்களைக் கொண்டு வந்து வாதிடலாம் எனச் சிலர் சொன்னபோது, “வேண்டாம்யா, வில்சன் பாத்துகிடட்டும்” என என்னை அடையாளம் காட்டினார் முதலமைச்சர் கலைஞர். அந்த வழக்குக்காகப் பல ஆய்வுகள், பல அறிஞர்களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டேன். மேலும் பல பாடத்திட்ட நூல்களில் இருந்து குறிப்புகள், பள்ளி ஆசிரியர்கள் 30 பேரின் உதவியுடன், நீதிமன்றம் மறுக்க முடியாத அளவுக்குத் தரவுகளைச் சமர்ப்பித்து வெற்றி பெற்றோம். அந்த வழக்கில் கலைஞர் அவர்கள் என் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றினேன்.

அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளுக்கு கல்விக் கட்டண நிர்ணயச் சட்டம் கலைஞர் கொண்டு வந்தார். அதை எதிர்த்து அனைத்து தனியார் பள்ளிகள் ஒன்றுசேர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து ரத்து செய்யக் கோரினர். அப்போதும் "டெல்லி வழக்கறிஞர் வேண்டாம்; வில்சன் பாத்துகிடட்டும்” என என்னை அடையாளம் காட்டினார் முதல்வர் கலைஞர். பெரும் சட்டப் போராட்டத்தில் பள்ளிக்கட்டணங்களை முறைப்படுத்தியதும் கலைஞர் அவர்கள்தான்

அதன் பின்னர் பல வழக்குகளில் கலைஞர் அவர்களின் எண்ண ஓட்டத்துக்கு ஏற்பப் பணியாற்றி இருக்கிறேன். நமது ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல சமூக நீதித் திட்டங்களை, 2011-ஆம் ஆண்டு காலத்தில் நிர்மூலமாக்கத் திட்டமிட்டார் ஜெயலலிதா அம்மையார். முதலில் அவர் கை வைத்தது சமச்சீர் கல்வி. சமச்சீர் கல்வித் தடைக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து, உச்சநீதிமன்றம் வரை போராடித் தடை பெற்றோம். அதற்காகப் பல ஆய்வுகள், பல அறிஞர்களின் உதவிகளைப் பெற்றுக் கொண்டேன். எல்லாவற்றுக்கும் பின்புலமாக கலைஞர் இருந்தார். அந்த நாட்களில் அவருக்கு முதுகு வலிப் பிரச்சினைகள். மருத்துவ ஓய்வில் இருந்தாலும், இதைக் கவனிக்கத் தவற மாட்டார்.

அதற்குக் காரணம், தான் கொண்டு வந்த திட்டம் என்பதால் அல்ல; சமூகநீதி நோக்கி அவர் கொண்டுவந்த ஒரு திட்டம் சிதைந்து விடக்கூடாது என்கிற எண்ணம்தான். அதே போல, பெரும் சட்டப் போராட்டத்தில் பள்ளிக்கட்டணங்களை முறைப்படுத்தியதும் கலைஞர் அவர்கள்தான்.

> **அவர் இறுதி மரியாதைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களை நீதிமன்றத்துக்கு அளித்து இரவு பகல் வாதம் செய்து வெற்றி பெற்றோம்.**

## உன் கடவுளின் விருப்பம்

முக்கியமாக, அப்போது சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகும் பரிந்துரைப் பட்டியலில் என் பெயர் இருந்தது அவருக்குத் தெரியும். ஆனாலும், அரசுக்கு எதிராக வழக்கினை எடுக்கச் சொன்னார். நானும் அதைப் பற்றி யோசிக்கவில்லை. கலைஞர் சொன்னால் அதைச் செய்வது என்பதுதான் எனது மந்திரம்.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாற்ற வேண்டும் என முடிவு செய்கின்றனர். அவருக்கு அந்தச் செய்தி கிடைத்த மாத்திரத்தில், இரவு 11 மணிக்கு போன் செய்தார். இதற்கு உடனடியாக வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றார். “சரிங்கய்யா” எனக் கூறிவிட்டு, காலையில் ஆவணங்களைத் தயார் செய்யலாம் எனத் தூங்கிவிட்டேன். காலை 5 மணிக்கு கலைஞரிடமிருந்து போன் வருகிறது. “என்னய்யா வழக்கு தயார் பண்ணிட்டீங்களா?” என்கிறார். அந்த வேகத்துக்கு நம்மால் ஈடு கொடுக்க முடியாது. அதிலும் நாம் தடை உத்தரவு வாங்கினோம். இன்று அண்ணா நூற்றாண்டு நூலகம், அறிவு பரப்பும் சுரங்கமாக நீடித்து இருக்கிறது என்றால், அதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத்தான் கை காட்ட வேண்டும்.

இப்படிக் கழகத்தின் சார்பிலான தொடர் சட்டப் போராட்டங்கள், அவற்றில் வெற்றி பெறுவது என இருந்தன. ஒரு நாள் அவரைச் சந்திக்கச் செல்கையில்தான் எனது பெயரை “வாய்யா ‘வின்’சன்” (WINSON) என அன்பு ததும்ப அழைத்தார்.

இப்படியான வழக்குகளால், எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு அமையவில்லை என்பதைக் குறிப்பிடுகையில், ஒருமுறை சொன்னார், “நீ வணங்கும் கடவுள், நீ என்கூடத்தான் இருக்க வேண்டும் என விரும்புகிறார்ய்யா, அதனால்தான் உனக்கு நீதிபதியாகும் வாய்ப்பு அமையவில்லை” என்றார். எனக்கு நீதிபதியாகும் வாய்ப்பினை விடவும், கலைஞர் என் மீது கொண்டிருந்த அன்பு மிக உயர்வாகத் தெரிந்தது. அந்த வார்த்தைகள் எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைகள் என்பதைப் பின்னாளில் நான் உணர்ந்தேன். இன்று, இந்தியாவுக்கே சட்டங்களை இயற்றும் மன்றத்தில் நான் நின்று பேசுகிறேன் என்றால், கலைஞரின் அந்த வார்த்தை உயிர்பெற்றுள்ளது என்றுதானே பொருள்.

அவரது வார்த்தைக்கு, இன்னொரு வரலாற்றுத் தருணமும் இருக்கிறது என நான் உணர்ந்தது அவரது இறுதி மரியாதை நாள். அவரை அடக்கம் செய்ய நாம் நடத்திய சட்டப் போராட்டம் என் வாழ்நாளில் மறக்க முடியாதது.

மெரினாவில் பேரறிஞர் அண்ணாவுக்கு அருகில்தான் அவர் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக, அவர் இறுதி மரியாதைக்குக் கொள்கை ரீதியான விளக்கங்களை நீதிமன்றத்துக்கு அளித்து இரவு பகல் வாதம் செய்து வெற்றி பெற்றோம். அந்த உத்தரவுடன் வந்து கலைஞரைப் பார்க்கிறேன்; “நீ என்னோடு இருக்க வேண்டும் என, உன் கடவுள் விரும்புகிறார்” என்று அவர் சொன்னது நினைவுக்கு வருகிறது. இதற்காகத்தான் உங்களோடு இருக்கச் சொன்னீர்களா? என கண்களில் கண்ணீர் ததும்ப அவரின் தீர்க்கதரிசனத்தை உணர்ந்தேன். அதுதான் அவர். எல்லாவற்றிலும் அவர் தீர்க்கதரிசி..!"

...பகிர்வார்கள்

## பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பு!

மணிப்பூர் கலவரத்தின்போது 2 பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட காட்சிகள் உலகையே உலுக்கின. மணிப்பூரில் மட்டுமல்ல, பா.ஜ.க. ஆட்சியில் நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. பா.ஜ.க.வின் 10 ஆண்டு ஆட்சிக்காலம் முடியும் தருவாயில், பெண்கள் பாதுகாப்பின் நிலை என்னவென்பதை தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகள் படம் பிடிக்கின்றன.

2014-இல் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் ஒரு லட்சத்துக்கு 55.3 என்ற அளவிலிருந்த நிலையில், 2022-இல் 66.4 ஆக அதிகரித்திருக்கிறது. அதே சமயம் இந்தியாவிலேயே பணிபுரியும் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்கள் பட்டியலில் சென்னை முதலிடத்தில் இருப்பதாக, சமீபத்தில் ஓர் ஆய்வறிக்கை வெளியானது கவனிக்கத் தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



### விடுதலைப் படம்!



கிறிஸ்டோ ஹுசைன்

1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்ற காரணத்துக்காக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் 62 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தார். அவர் விடுதலையான போது என்னுடைய தாத்தா பாளை எம்.எஸ்.ஹுசைன் அவர்கள் வரவேற்கச் சென்றார். கலைஞருக்கும் என் தாத்தாவுக்குமான நட்பு அப்படிப்பட்ட ஒன்றாக இருந்தது. தலைவர், பாளையங்கோட்டையில் எங்கள் இல்லத்துக்கு வருகை தந்த போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

–கிறிஸ்டோ ஹுசைன்,
இளைஞர் அணி, பாளையங்கோட்டை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in


## கருவூலம்

### முதல் பிரிவு!

**1961-ஆம் ஆண்டு ஜனவரி 21, 22 தேதிகளில் கழகத்தின் செயற்குழுவும் பொதுக்குழுவும் வேலூரில் கூடியது. ஈ.வெ.கி.சம்பத் செயற்குழுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசும்போது, கட்சியின் முன்னணித் தலைவர்கள் சிலருக்கு எதிராகக் கருத்துகளை முன்வைத்தார். இதனால், கூட்டத்தில் சலசலப்பு எழுந்தது. மறுநாள் கட்சியின் அவைத் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாகக் கடிதம் ஒன்றை அளித்தார். அவரை அமைதிப்படுத்தி, பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்கு பேரறிஞர் அண்ணா மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 399

எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131